விலை ரூபா: 6.00 | பக்கங்கள்:-பத்து | Registered as a News paper in Sri Lanka

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

வலம்புரி
VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | மாசி 13 செவ்வாய்க்கிழமை (25.02.2003) | தொலைபேசி~ 2223378 | ஒலி 68

# திருமலையில் கடற்படையும் - புலிகளும் தாக்குதலுக்கு தயாராக இருந்தனர்!

## கண்காணிப்புக் குழு உபதலைவர் பேட்டி

(கொழும்பு)

அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்தநிறுத்த உடன்பாட்டிற்குப்பின் இரு தரப்பினரும் ஆயுதப் பிரயோகம் செய்வதற்கு தயாராக இருந்த மிக ஆபத்தான முதற் சம்பவம்- திருகோணமலை திரியாயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புலிகள்- கடற்படையினரின் முறுகல் நிலையாகுமென யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உப தலைவர் ஹொக்லண்ட் நேற்றிரவு பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

குச்சவெளி திரியாய்ப் பகுதியில் கடற்படையினரும் விடுதலைப் புலிகளும் ஒருவரை ஒருவர் முற்றுகையிட்டிருந்த நிலையில் அவர்களுக்கிடையே ஏற்பட்டிருந்த முறுகல் நிலையை தணிப்பதற்காக கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் மூவர் உடனடியாக சம்பவ இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இது தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உப தலைவர் ஹொக்லண்ட் பி.பி.ஸிக்கு மேலும் தெரிவிக்கையில்;

கடற்படையும் விடுதலைப் புலிகளும் பலமான நிலையில் ஆயுதங்களை பாவிப்பதற்கு தயாராக இருந்த போது நிலைமை மிகவும் மோசமான கட்டத்தை அடைந்திருந்தது. இந் நிலையில் இருசாராரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மாற்றுத் திட்டத்தை முன் வைத்த போது அதனை மிகவும் அவதானமாகவும் நிதானமாகவும் சிந்தித்து அத் திட்டத்திற்கு இரு தரப்பும் ஒப்புக்கொண்டன.

இதன் பின் விடுதலைப் புலி உறுப்பினர்களை எமது வாகனத்தில் அழைத்துச் சென்றோம். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. புலிகள் தங்களை பாதுகாக்க ஆயுதம் வைத்திருந்தனர். எனினும் கடற் படையினர் அவர்களை எச் சந்தர்ப்பத்திலும் தடுத்து வைத்தி ருக்கவில்லை.

அவர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக

(10ம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தற்போதைய அரசு பாடுபடுகிறது!

## அணிசேரா மாநாட்டில் ஜனாதிபதி உரை

(கோலாலம்பூர்)



மலேஷியத் தலைநகர் கோலாலம்பூரில் நேற்றுக் காலை ஆரம்பமான அணிசேரா நாடுகளின் 13வது மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**அணிசேரா அமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ள நாடுகளுக்கிடையே இடம் பெற்றுவரும் ஆயுதம் தொடர்பான சர்ச்சைகள், சர்வதேச பயங்கரவாதம் என்பவற்றிற்கான காரணங்களை, தீவிரமாக ஆராய்ந்து அவற்றிற்கு தீர்வு காண அணிசேரா நாடுகளின் அமைப்பு முன் வரவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

நேற்று ஆரம்பமான அணிசேரா அமைப்பு நாடுகளின் உச்சி மாநாட்டில் 114 நாடுகளின் தலைவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

114 நாடுகளின் தலைவர்களும் மற்றும் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட இந்த உச்சி மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உரையாற்றும் போது மேலும் தெரிவித்திருப்பதாவது;

இலங்கையில் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கு முக்கிய காரணமாக இருந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தற்போதைய அரசாங்கம் சமாதான முயற்சிகளை பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியிலும் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. அரசம் விடுதலைப் புலிகளும்

(10ம் பக்கம் பார்க்க)

உள்ளே

வடக்கு-கிழக்கு மாகாண எழுதுநர் மற்றும் அதனோடு இணைந்த சேவைகளுக்கான ஆட்சேர்ப்பில் நேர்முகப் பரீட்சையில் சித்திபெற்று யாழ் மாவட்டத்தில் நியமனம் பெறுவோரின் பெயர் விபரங்கள்

7-ம் பக்கத்தில்...

# யாழ்ப்பாணத்தில் குடியமர முஸ்லிம்கள் அஞ்சுகின்றனர்

## மௌலவி காசிம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற இவ் வேளையில் முஸ்லிம் சமூகத்தவர்களால் முன்வைக்கப்படும் கருத்துக்கள் தமிழ் மக்களையோ விடுதலைப் புலிகளையோ ஒரு போதும் பாதிக்காது என்று மௌலவி ஏ.எம்.எம்.காசிம் தெரிவித்துள்ளார்

சமாதான சர்வமத பிரார்த்தனையில் கலந்து கொள்வதற்காக நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த மௌலவி ஏ.எம்.எம்.காசிம் பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; முஸ்லிம்கள் தமது உரிமைகளை வலியுறுத்தியே கருத்துக்களை வெளியிடுகின்றனர்.

அவை உரிய தரப்பினர்களால் உணரப்படாத முரண்பாடான கருத்துக்களாக உள்ளதால் அதனை உணரவைக்கவே முஸ்லிம் சமூகத்தவர்கள் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

(10ம் பக்கம் பார்க்க)

# கத்தோலிக்க ஆயர்கள் நேற்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

இலங்கையில் உள்ள 9 கத்தோலிக்க ஆயர்கள் நேற்றுப் பிற்பகல் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் நடுவப் பணியகத்தில் நேற்று மாலை இடம் பெற்ற இச் சந்திப்பில் கொழும்பு மறைமாவட்ட அதி மேற்றிராணியார் அதி வணக்கத்திற்குரிய ஒஸ்வேல்ட் கலமிக்ஸ் அடிகளார், அதிவணக்கத்திற்குரிய மார்க்கஸ் பெர்னாண்டோ அடிகளார், அதி வணக்கத்திற்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகளார், அதி வணக்கத்திற்குரிய லோயாமிக்

(10ம் பக்கம் பார்க்க)

# புலிகள் விடுதலை அனுரா கண்டனம்

(கொழும்பு)

திருகோணமலை திரியாய்ப் பகுதியில் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏழு விடுதலைப் புலி உறுப்பினர்களை அரசு தலையிட்டு விடுவித்தமை தொடர்பாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் அனுரா பண்டாரநாயக்காவும் ஜே.வி.பியினரும் அரசைக் கண்டித்து தனித் தனியாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதி செயலகம் ஊடாக அனுரா பண்டாரநாயக்கா விடுத்துள்ள அறிக்கையில்;

புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலில் உள்ள போது அதனை மீறும் வகையில் செயற்பட்ட விடுதலைப்புலி உறுப்பினர்களை கடற்படையினர் தடுத்து வைத்திருந்த போதும் அரசின் மேலிடத்து உத்தரவின் பேரில் அவர்களை விடுவித்திருப்பது

(10ம் பக்கம் பார்க்க)

## விளையாட்டுத்துறை அமைச்சர் யாழ்.வருவார்

(கொழும்பு)

விளையாட்டுத் துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ நாளை மறுதினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்

யாழ்ப்பாணம் வருகை தரும் இவர் யாழ் செயலகத்தில் நடைபெறும் மாநாடு ஒன்றில் கலந்து கொள்வார்

மாலை பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றையும் அமைச்சர் ஜோன்சன் பெர்ணான்டோ நடத்துவார்.

(த-43)

# நல்லை ஆதீனத்தில பக்திபூர்வமாக நடந்த சர்வமதப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

சமாதானத்தை வலியுறுத்தும் சர்வ மதப் பிரார்த்தனை நேற்றுப் பிறபகல் 4மணிக்கு நல்லை ஆதீனத்தில் மிகவும் பக்திபூர்வமாக அனுஷ்டிக் கப்பட்டது.

கொழும்பில் உள்ள சர்வமத சமாதான நிதியமும் யாழ் மாவட்ட மனிதநேய அமைப்புகளும் இணைந்து மேற்கொண்ட இந் நிகழ்வில் கலந்து கொண்ட மதத் தலைவர்கள், மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் சமாதான தீபம் ஏற்றி பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ்.பரமநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பௌத்தமதம் சார்பாக அதி சங்கைக்குரிய மாதம்பக அஸ்வஜித் தேரரும், இந்துமத சார்பாக சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் மகேஸ்வரக் குருக்களும், கிறிஸ்தவ மதம் சார்பாக அருட் தந்தை

(10ம் பக்கம் பார்க்க)








இலங்கை அணியை வெற்றி கொண்ட மகிழ்வில் கென்ய வீரர்கள்



சிம்பாப்வேயை வென்ற மகிழ்வில் அவுஸ்திரேலிய வீரர்கள்



ஓ.சுஜீ, ஆட்டமிழந்து செல்லும் காட்சி

AP

## இன்றைய ஆட்டம்

**பாகிஸ்தான்**
**எதிர்**
**நெதர்லாந்து**
(பார்ல்)
2.00 P.M

## இந்திய அணியின் வெற்றிக்கு போராடுவேன்

உலகக் கிண்ணக் கிரிக்கெற்றில் இந்தியா மூன்று வெற்றிகளையும் ஒரு தோல்வியையும் எடுத்துள்ளது. எஞ்சியுள்ள ஆட்டத்தில் கணிசமான அளவு வெற்றி பெற்றால்தான் சுப்பர் சிக்ஸ்க்கு வாய்ப்புக் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந் நிலையில் பயிற்சியாளர் ஜான் ரைட் கூறும் போது உலகக் கிண்ண போட்டி வேளையில் புதிய முயற்சிகளை இந்திய வீரர்கள் எடுக்க மாட்டார்கள். ஆனால் நாம் இந்தியாவின் வெற்றிக்காக கடுமையான திட்டங்களைப் போட்டு முயற்சி செய்து வருகிறேன். பயிற்சியாளர் என்ற வகையில் அணி வீரர்களையும் ஒற்றுமைப்படுத்தி இறுதிப் போட்டிக்கு செல்லும்வகையில் பயிற்சியளிக்கவும் உள்ளேன்.

இவ்வாறு இந்திய அணியின் பயிற்சியாளர் ஜோன் ரைட் தெரிவித்தார்.




## உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2003

### இலங்கை எதிர் கென்யா

### கென்யா

50ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 210ஓட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஒற்ரோனா | c முரளிதரன் | b டி சில்வா | 60 (88) |
| சாக் | lbw | b வாஸ் | 0 (1) |
| பட்டேல் | c சங்ககார | b வாஸ் | 12 (21) |
| றிகோலோ | lbw | b முரளிதரன் | 10 (22) |
| மோடி | | b முரளிதரன் | 26 (56) |
| ஒடும்பே | c ஆர்னோல்ட் | b முரளிதரன் | 26 (44) |
| ஓடியோ | c சங்ககார | b வாஸ் | 6 (15) |
| ஓபுயா | Not out | | 13 (21) |
| சுஜீ | b முரளிதரன் | | 6 (14) |
| ஒன்கோன்டோ | b ஜெயசூரியா | | 20 (18) |
| எ.சுஜீ | Not out | | 3 (2) |

உதிரிகள் - 28

### பந்து வீச்சு -கென்யா

| | | | |
|---|---|---|---|
| வாஸ் | 10 | 41 | 3 |
| நிஷங்க | 7 | 29 | 0 |
| பெர்னாண்டோ | 7 | 33 | 0 |
| முரளிதரன் | 10 | 28 | 4 |
| ஜெயசூரியா | 9 | 30 | 1 |
| டி சில்வா | 5 | 23 | 1 |
| ஆர்னோல்ட் | 2 | 10 | 0 |

### இலங்கை

45 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| அத்தப்பத்து | | b ஓடியோ | 23 (38) |
| ஜெயசூரியா | c பட்டேல் | b எ.சுஜீ | 3 (7) |
| திலகரத்னா | c எ.சுஜீ | b ஓபுயா | 23 (47) |
| டி சில்வா | c ஒற்ரோனா | b ஓபுயா | 41 (53) |
| ஜெயவர்த்தனா | c&b | b ஓபுயா | 5 (13) |
| சங்ககார | c ஒற்ரோனா | b ஓபுயா | 5 (13) |
| ஆர்னோல்ட் | Not out | | 25 (37) |
| வாஸ் | c&b | b ஓபுயா | 4 (10) |
| நிஷங்க | c ஓடியோ | b றிகோலோ | 2 (23) |
| முரளிதரன் | c எ.சுஜீ | b றிகோலோ | 10 (22) |
| பெர்னாண்டோ | | b ஒடும்பே | 7 (8) |

உதிரிகள் –09

### பந்து வீச்சு -கென்யா

| | | | |
|---|---|---|---|
| எ.சுஜீ | 8 | 24 | 1 |
| ஓடியோ | 7 | 33 | 1 |
| ஓபுயா | 10 | 24 | 5 |
| ஒன்கோன்டோ | 5 | 22 | 0 |
| ஒடும்பே | 10 | 39 | 1 |
| றிகோலோ | 5 | 13 | 2 |

## அவுஸ்திரேலியா வெற்றி

உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டியில் சிப்பாப்வேக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலியா 7 விக்கெட்டுக்களால வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 50 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 246 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அன்ரி பிளவர் 62 ஓட்டங்களையும் பிளிக்நெற் 54 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ஹொக், மக்ராத் முறையே 3,2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 47.3ஓவர்கள் முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 248 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்துடன் இணைந்து

## வலம்புரி

நடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப்போட்டி

**போட்டியில் பங்கு பற்றுங்கள் பெறுமதியான பரிசை வெற்றி கொள்ளுங்கள்**

1) இம்முறை உலகக்கிண்ணத்தை வெல்லும் அணி எது?

2) இப் போட்டியின் சகலதுறை ஆட்டக்காரர் யார்?

**உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**கிரிக்கெற் பரிசுப் போட்டி**

**வலம்புரி**

**இல 15, வெள்ளாந்தெரு**

**யாழ்ப்பாணம்.**

**உங்கள் விடையுடன் தவறாது இக் கூப்பனை வெட்டி அனுப்புங்கள்**

**உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003**

முழுப்பெயர் : ........................................

முகவரி : ........................................

........................................

தே.அ.அ.இல : ........................................

கையொப்பம்:........................................

**அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி**

**மார்ச் 15, 2003**



CRICKET WORLD CUP 2003 உலகக் கிண்ணக் கிரிக்கெற் திருவிழா–2003

# நேர்மை, பக்கச்சார்பின்மை, அர்ப்பணிப்பு சத்தியப்பிரமாணம்

## 67 ஆயிரம் பொலிஸார் செய்வர்

(கொழும்பு)

நேர்மை, பக்கச் சார்பின்மை, அர்ப்பணிப்பு என்ற மூன்றையும் இலக்காகக் கொண்டு சேவையாற்றுவேன என இலங்கையில் உள்ள சுமார் 67 ஆயிரம் பொலிஸார் சத்தியப் பிரமாணம் செய்யவுள்ளனர்.

எதிர்வரும் 8 ஆம் திகதி பொலிஸ் தலைமையகத்திலும் நாடு முழுவதிலும் உள்ள பொலிஸ் நிலையங்களிலும இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

138 வருடங்கள் பழமை வாய்ந்த இலங்கைப் பொலிஸார் சேவையில் இதுவரை பொலிஸ் ஒழுங்கு விதிகளுக்கமையவும் சட்டத்தின் பிரகாரமும் இவ்வாறான சத்தியப் பிரமாணம் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# ஊடகவியலாளர் நலன் பேணும் சட்டங்கள்

(கொழும்பு)

ஊடகச்சுதந்திரத்தை உத்தரவாதம் செய்வதற்கான மேலும் பல சட்டங்களை அரசாங்கம் அறிமுகம் செய்யவுள்ளது.

மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில், அரசாங்கத் தகவலகளை தெரிந்து வைத்திருக்கும் உத்தியோகத்தர்களையும், ஊடகவியலாளர்களையும் பாதுகாப்பதற்கான விசேட சட்டமும் இதில் அடங்கும்.

தற்போது நடைமுறையில் உள்ள ஊடக ஆணைக்குழுவுக்கு பதிலாக பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக குழு ஒன்றும் அமைக்கப்படவுள்ளது என்று குறிப்பிட்டார். (உ)

# சீமெந்து எடுத்துச் செல்லும் நடைமுறையில் மாற்றம் வேண்டும்

## பிரதமரிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

வன்னிப் பகுதிக்கு அதிகளவில் சீமெந்து கொண்டு செல்வதற்கு உத்தரவுப் பத்திரம் பெறும் நடைமுறை மாற்றப்பட வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கல நாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வன்னிக்குப் 10 பக்கற் சீமெந்து எடுத்துச் செல்வதானால் உதவி அரசாங்க அதிபரிடமும், 25 பக்கற் றுக்கு மேல் கொண்டு செல்வதானால அரசாங்க அதிபரிடமும் உத்தரவுப் பத்திரம் பெறும் நடைமுறை தற்போது இருந்து வருகின்றது.

இத்தகைய உத்தரவுப் பத்திரம் பெறும் முறையினால் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் தமது அழிக்கப்பட்ட வீடுகளைமீண்டும் புனரமைக்க முடியாத நிலை வன்னி மக்களிடையே காணப்படுகிறது என்றும் பிரதமருக்கு சுட்டிக்காட்டியுள்ளார். (உ-3)

# மீளக்குடியமர்வுக்கு 20 நாள் அவகாசம்

## தவறினால் மறியல் போராட்டம்

(தனங்கிளப்பு)

தனங்கிளப்பு, மறவன்புலோ, கைதடி நாவற்குழி வடக்கு ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன் தினம் கோயிலாக்கண்டி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

தென்மராட்சி பிரதேச மக்கள் நலன் காக்கும் சங்கத்தின் செயலர்கள் எஸ். அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தென்மராட்சிப் பிரதேச செயலர் மனித உரிமைகள் ஆணைக்குழு வினயாழ் அலுவலக இணைப்பாளர் ருவான் சந்திரசேகர, கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலக இணைப் பாளர் திருமதி ரூலா மற்றும் நூற்றுக-கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தமது மீள்குடியமர்வு தொடர்பாக 20 நாட்களுக்குள் சாதகமான பதிலைத் தராவிட்டால் தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாக தொடர் மறியல் மற்றும் உண்ணாவிரதப் போராட்டங்களில் ஈடுபடப்போவதாக சம்பந்தப்பட்ட மக்கள் இதில் தெரிவித்தனர்.

இது விடயம் தொடர்பாக தென்மராட்சிப் பிரதேச செயலர், கண்காணிப்புக் குழு மனிதஉரிமைகள் ஆணைக் குழு என்பவற்றுக்கு மகஜர்களும் கையளிக்கப்பட்டன.

இதேவேளை, விரைவில் இப்பிரச்சினைக்கும் சாதகமான முடிவு பெற்றுத் தரப்படும் என பொது மக்களுக்கு உறுதியளிக்கப்பட்டது. (உ-37)

அன்பு மாணவ மணிகளே!
உங்கள் அபிமான
வலம்புரியில்
VALAMPURI
உங்கள் பிரதிகளுக்கு இன்றே முந்துங்கள்
ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் 5ஆம் தர புலமைப் பரிடசைக்கான மாதிரி வினாத்தாள் வெளிவருகின்றது.
மாணவர்களால் எழுதி அனுப்பப்படும் விடைகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர், பாடசாலையின் பெயர் என்பன வலம்புரியில் வெளிவரும்.
உங்கள் விடைகளை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி
கல்விப் பகுதி
வலம்புரி
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# சிவாஜிலிங்கம் நெடுந்தீவு விஜயம்

(நெடுந்தீவு)

தமிழர் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கடந்த சனியன்று நெடுந்தீவுக்கு விஜயம் மேற்கொண்டு, நெடுந்தீவு கடற்றொழிலாளர்சங்கக் கட்டடத்தில் நெடுந்தீவு மக்கள் ஒன்றியத் தலைவர் ரி. மரியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கு கொண்டார்.

இக்கலந்துரையாடலில் பல்வேறு பொது நிறுவனங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள், அரச ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டு கருத்திட்டங்கள், எதிர்காலப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்தனர்.

நெடுந்தீவு வைத்தியசாலைக்கு தொலைத்தொடர்பு வசதி மற்றும் குளிரூட்டி வசதி ஏற்படுத்தல் மற்றும் நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு படகுத் தூக்கி தளம் அமைப்பு, நெடுந்தீவு பிரதான வீதியை திருத்துதல் ஆகியவற்றிற்கு நிதியுதவி செய்து தரப்படும் என்றும் அங்கு சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். (உ-126)

# மானியக் கொடுப்பனவு

(சுதுமலை)

மானிப்பாய், சங்கானை பிரதேச செயலர் பிரிவுகளில் சுகாதாரமான மலசல கூடங்கள் கட்டி முடித்த 10 பேருக்கான மலசலகூட மானியக் கொடுப்பனவு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மானியத்திற்கு விண்ணப்பித்தவர்கள தமது பகுதி சுகாதாரப் பரிசோதகர் ஊடாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அடையாள அட்டையை காண்பித்து மானியத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-252)

# விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் வித்தியாலய அதிபர் திருமதி அ. சண்முகானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக டாக்டர் கௌரி செல்வரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார். (உ-3)

# நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். சலனசித்திரம் அமைப்பின் முதலாவது வருடாந்த மாநாடும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்று முன்தினம் சலன சித்திரம் சம்மேளன தலைமைச் செயலகத்தில் சம்மேளனப் பொதுச் செயலாளர் க.தேவதாசன் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பாண்டு நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பெருந்தலைவர் பொன. பூலோகசிங்கம், தலைவர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி, பொதுச் செயலாளர் சி.விவனா, நிதிச்செயலாளர் ந.குமுததாஸ், இணைச்செயலாளர்கள வே. சதீஸ்வரன், க.புஸ்பகாந்தன், செ. தினேஸ், வி.எஸ். கரிகாலன், கமச்சேந்திரகுமாரி, உள்ளகக் கணக்காய்வாளர் த.சிவநேசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

# உதைபந்தாட்ட போட்டி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி எதிர் வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் காலை 9.00 மணிமுதல் இடம்பெறவுள்ளது.

# விண்ணப்பம் கோரல்

(சுதுமலை)


வடக்கு-கிழக்கு மாகாணப் பகுதிகளில் உள்ள உளளூராட்சி மன்றங்கள் மற்றும் பொது நூலகங்களில் கடமை புரியும் நூலகர்களை இணைந்த நூலகப் பொறுப்பாளர் பதவிக்கு தரம் உயர்த்தப்படுவதற்கான விண்ணப்பங்கள் அரச நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சினால் கோரப்பட்டுள்ளளன. (உ-252)

# வரிவசூலிப்பை புலிகள் நிறுத்திவிட முடியாது

## ரவிராஜ் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தளவில் அவர்களது கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள



நிர்வாகத்தை நடத்துகின்ற பாரிய பொறுப்பு இருப்பதினால் அதற்குரிய வளங்களை வேறு வழிகளில் பெறும்வரை அவர்கள் வரிவசூலிப்பதை நிறுத்தி விடமுடியாது என்று யாழ். மாவட்ட எம்.பி ரவிராஜ் பி.பி.சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை நேற்று முன்தினம் சந்தித்தபின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் அது தொடர்பாக சில கருத்துக்களை பி.பி.சிக்கு தெரிவித்திருந்தார்.

அவர் தெரிவித்திருந்த மேலும் சில கருத்துக்கள் வருமாறு,

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான விளக்கங்களை சு.ப.தமிழ்சசெல்வன் விளக்கியிருந்தார்.

தீர்த்து வைக்கப்படாத மக்களின் பிரச்சினைகள் மற்றும் பொதுப் பிரச்சினைகளில் தாங்கள் ஒன்றிணைந்து செயற்படுவதில் இருக்கக் கூடிய சிக்கல்கள் தொடர்பாகவும் இதில் ஆராய்ந்துள்ளோம்.

ஐந்து சுற்றுப் பேச்சுவார்த்தை முடிநத நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதாக எமக்குத் தெரியவில்லை. ஆனாலும், தமிழ் மக்களால் இப்பேச்சுவார்த்தை குழமபக கூடாது என்பதற்காக பல விடயங்களில் விட்டுக் கொடுப்புக்களுடனும் பேச்சுவார்த்தையை நடத்திச் செல்வதாக எமக்கு கூறப்பட்டது.

யாழ்.நூலகம் திறப்பது தொடர்பில் பத்திரிகை செய்திகளின் படி பிரச்சினைகள் இருந்தாலும் நேற்று தமிழ்ச்செல்வனுடனான பேச்சுவார்த்தையல் இவ்விடயம் பெரிதாக பேசப்படாவிட்டாலும் இது தொடர்பாக விடுதலைப் புலிகளும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் சந்தித்துப் பேச கால அவகாசம் கிடைக்காமையால் தான் இத்தகைய தொரு தப்பபிப்பிராயம் எழுந்துள்ளது என்றே கூற வேண்டும்.

ஆனால் விடுதலைப்புலிகளுக்கும்கூட்டமைப்பிற்கும் இது தொடர்பாக எந்த விதமான பிரச்சினையும் இல்லை என்று ரவிராஜ் கூறினார். (வ)



வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் அண்மையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் நடாத்தப்பட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல் கண்காட்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட காரை இந்துக்கல்லூரி அதிபர் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை உரையாற்றுவதனையும், இந்துகலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதனையும் படத்தில் காணலாம்.
படம் : காரைநகர் நிருபர்



அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் ஆற்றுகை செய்யப்படும் மிதிவெடி விழிப்புணர்வு நாடகத்தின் ஓர் காட்சி



பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப்பாடசாலையில் நடைபெற்ற சமாதானவிழாவை மாணவத்தலைவி செல்வி லோகினி மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைக்கிறார். வடமராட்சி வலய முறைசாராக்கல்விப்பிரிவு உதவிக்கல்விப்பணிப்பாளர் எம்.ஸ்ரீபதி ? ரையாற்றுகிறார்.
படம் :பருத்தித்துறை நிருபர்

# உலகப் பொலிஸ்காரராக எந்த ஒரு நாடும் செயல்பட அனுமதிக்க முடியாது

## அணிசேரா உயர் தலைவர்கள் மாநாட்டில் மலேஷியப் பிரதமர்

(கோலாலம்பூர்)

எந்த ஒரு நாட்டையும் உளவுப் பொலிஸ்காரராக மாற இடமளிக்கப் போவதில்லை என்று மலேஷியப் பிரதமர் மகதிர் முகம்மட அணிசேரா மாநாட்டில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

114 நாடுகளில் அங்கத்துவம் வகிக்கும் அணிசேரா நாடுகளின் மாநாடு நேற்று கோலாலம்பூரில் ஆரம்பமானது.

ஈராக் மீது தாக்குதல் நடத்த உத்தேசித்துள்ள வல்லரசு நாடுகள் குறித்து தனது கண்டனத்தை வெளியிட்ட மலேஷியப் பிரதமர் ஐ.நா அமைப்பின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுமாறு ஈராக்கைக் கேட்டுக்கொண்டார்.

மேலும் ஒரு நாட்டின் ஆயுதங்கள் மாத்திரம் களையப்படக்கூடாது என்றும் உலகிலுள்ள சகல நாடுகளின் ஆயுதங்களும் களையப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தினார்.

அதிகாரங்கள் சகலருக்கும் சமத்துவமாகப் பங்கிடப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

முன்னதாக மகதிர் முகம்மட் அணிசேரா நாடுகளின் வர்த்தகப் பிரமுகர்கள் மத்தியில் பேசுகையில்,

ஈராக்கிற்கு எதிரான தாக்குதல் பயங்கரவாதத்திற்கு எதிரானது என்பதைக் காட்டிலும் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதலாகத்தான் இஸ்லாமிய உலகம் கருதும். ஈராக் மீதான தாக்குதல் அதிகமான முஸ்லிம்களை கோபம் அடையச் செய்யும்.

ஒட்டு மொத்த அழிவை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களை வைத்திருப்பதாக வடகொரியா வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளது. ஆனால் வடகொரியா மீது மேற்கத்திய நாடுகள் கடுமையான நடவடிக்கை எடுக்காமல் லேசாக கண்டித்துவிட்டன. இது உண்மையிலேயே முஸ்லிம்களுக்கு எதிரான போர் என்பது இதன் மூலம் நிருபனம் ஆகிறது. ஒட்டு மொத்த ஆயுதங்களை வைத்துள்ளதாகக் கூறப்படும் நாடுகளுக்கு எதிரான போர் இது அல்ல என்றார். (பி)

### அணிசேரா தலைவர்களின் மனைவிமார் மாநாடு

(கோலாலம்பூர்)

மலேஷியத் தலைநகரான கோலாலம்பூரில் இடம்பெறும் உச்சி மாநாட்டில் ஒரு நிகழ்வாக நாடுகளின் தலைவர்களின் மனைவிமாருக்கான விசேட மாநாடு ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் 30 இற்கும் அதிகமான நாடுகளின் தலைவர்களின் பாரியார்கள் கலந்து கொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வெளியுறவுத்துறை அமைச்சர்களின் பாரியார்களிற்கும், தூதுவர்களின் பாரியார்களிற்கும் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டிற்கு மலேஷியப் பிரதமர் மகதிர் முகம்மட்டின் பாரியார் அஷ்மட் தலைமை தாங்குகின்றார்.

உலக அமைதி குறித்து இவர்கள் கலந்துரையாடுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி-9)

## தென்கொரிய ரயில் விபத்து 7பேர் கைது

(சியோல்)

தென்கொரிய சுரங்கப் பாதையில் இடம்பெற்ற ரயில் விபத்துத் தொடர்பாக இதுவரை 7பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 7 பேரும் ரயில்வேத் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களிற்கு முன்னர் இடம்பெற்ற ரயில் தீ விபத்துக் காரணமாக 133பேர் உயிரிழந்ததுடன் 146 பேர் காயமடைந்தனர்.

அத்துடன், 543க்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். இந்த ரயில் விபத்து சதி நாசகார வேலை என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (பி-9)

உலக தரிசனம்

## விபூதித்திருநாளை சமாதானத்தினமாக கொண்டாட பாப்பரசர் கோரிக்கை

(வத்திக்கான்)

யுத்தத்தை நியாயப்படுத்தும் கொள்கை உலகைப் பணயம் வைத்துள்ளதாகவும், இதனால் விபூதித் திருநாளான எதிர்வரும் 5ஆம் திகதியை சமாதானத்தினமாகக் கருதி பிரார்த்தனையில் ஈடுபடுமாறு பரிசுத்தப் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பயங்கரவாதம் மற்றும் யுத்தத்தை நியாயப்படுத்தும் கொள்கை மனித குலத்தின் எதிர்காலத்தைக் கட்டுப்படுத்த ஒருபோதும் இடமளிக்கக்கூடாது என்று பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் வத்திக்கானின் புனித பீற்றர் தேவாலயத்தில் நடத்திய ஞாயிறுப்பிரார்த்தனைக் கூட்டத்தின் போது கூறியுள்ளார். (பி-2)



## இனக்கொலை வழக்கில் பாதிரியாருக்கு சிறை

(நைரோபி)

1994 ஆம் ஆண்டு ருவாண்டாவில் நிகழ்ந்த இனக் கொலைகளின் போது ஒரு தேவாலய வளவில் அபயம் அடைந்திருந்த 600 மக்களின் படுகொலை தொடர்பாக விசாரிக்கப்பட்டு வந்த ஒரு பங்குக் குருவானவர் குற்றவாளியாக காணப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

கிறிஸ்தவ மதத்தின் ஏழாம் நாள் பிரிவின் போதகரான 78 வயதான எலிஸபான் என்ரக்கிருட்டிமனா என்பவருக்கு தன்சானியாவிலுள்ள ஐ.நா நீதிமன்றம் ஒன்று 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது. மனித உரிமைஅமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் இந்த பாதிரியாருக்கு விதிக்கப்பட்ட தண்டனை மிகவும் போதாது எனவும் ஏற்கனவே இவர் காவலில் இருந்துள்ள காலத்தை கழித்தால் ஆக நான்கு ஆண்டு காலம் தான் சிறையில் இருப்பார் என்றும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

எலிஸபான் பாதிரியாரின் மகன் ஹெராட்(ஒருடாக்டர்)டுக்கு 25 ஆண்டுகள் சிறைதண்டனை வழங்கப்பட்டது.

1994ஆம் ஆண்டு ருவாண்டாவில் ஏற்பட்ட நூறு நாள் இரத்தக் களரியின் போது 10 லட்சம் ருட்ஸி இனத்தவர்களும் மிதவாதிகளான ஹிட்டுஸ் இனத்தவர்களும் கொல்லப்பட்டனர். கொலைகாரர்களிடமிருந்து தப்பவதற்காக ஓடிக்கொண்டிருந்த மக்களில் 600 பேரை இந்தப் பாதிரியார் மேற்கு ருவாண்டாவிலுள்ள தமது தேவாலய வளவுக்குள் அழைத்துச் சென்று அமர்த்தினார் என்றும் பின்னர் அவரும் அவரது மகனும் கொலைகாரர்களை அழைத்து வந்தார்கள் என்றும் கூறப்பட்டது.

இந்தப்படுகொலைத்திட்டம் பற்றி அறிந்த அகதிகள், "நாளைய தினம் நாங்களும் எங்கள் குடும்பங்களும் கொல்லப்படப் போகிறோம் என்பதை அறியத் தருகிறோம்" எனப் பாதிரியாருக்குக் கடிதம் எழுதியிருந்தார்கள் என்றும் கூறப்பட்டது.


இந்துப் படுகொலைகள் பற்றி பின்னர் வெளியான ஒரு புத்தகத்தின் தலைப்பாக இந்த சொற்றொடர் பாவிக்கப்பட்டிருந்தது. அந்துப் புத்தகத்தை பிலிப் கவரவிச் என்ற அமெரிக்கப் பத்திரிகையாளர் எழுதி வெளியிட்டிருந்தார்.இவரது புத்தகம் இந்த வழக்கின் முக்கியத்தவத்தை உலகம் முழுவதும் பறைசாற்றி விட்டது.

"நீங்கள் எல்லோரும் அழிக்கப்பட வேண்டியவர்கள் கடவுளுக்கு இனிமேல் நீங்கள் தேவைப்படவில்லை" என்று பாதிரியார் அந்த மக்களிடம் கூறியிருந்தார் என பத்திரிகையாளர் தமது புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தார். (பி)

## ஈராக் மீது போர் தொடுக்க 2வது தீர்மானம் வசதி செய்யும்

### அதிபர் புஷ் தெரிவிப்பு

(வாஷிங்டன்)



ஈராக் மீது போர் தொடுக்க ஐ.நாவில் இந்த வாரம் இரண்டாவது தீர்மானத்தைக் கொண்டு வருவோம் என்று அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

மேலும், ஐ.நா.சபை தனது நம்பகத்தன்மையை நிரூபிக்க இது கடைசி சந்தர்ப்பம் என்றும் அவர் கூறினார்.

ஏற்கனவே ஐ.நா.பாதுகாப்பு கவுன்ஷில் விதித்த நிபந்தனைகளை ஈராக் நிறைவேற்றவில்லை என்றும் அணு ஆயுதங்களை கைவிடவில்லை என்றும் அமெரிக்கா குற்றம் சாட்டியது.

வாஷிங்டனில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியின் போது அதிபர் புஷ் இதனைத் தெரிவித்தார். அப்போது ஸ்பெயின் பிரதமர் ஜோஸ் மரியா அஜீனமும் உடன் இருந்தார்.

ஐ.நா பாதுகாப்பு கவுன்ஷிலின் 1441வது தீர்மானத்திற்கு ஈராக் ஒத்துழைப்பு அளிக்கவில்லை எனவே அந்நாட்டின் மீது போர் தொடுக்க இரண்டாவது தீமானத்தைக் கொண்டு வர இருக்கிறோம் என்று அதிபர் புஷ் குறிப்பிட்டார்.

பேரழிவை உண்டாக்கக்கூடிய அணு ஆயுதங்களை சதாம் ஹுசைன் தொடர்ந்து வைத்திருப்பதை அனுமதிக்க முடியாது. அணு ஆயுதங்களைக் கைவிட வேண்டும். ஐ.நாவின் நிபந்தனைகளை மீறி கண்டம் விட்டுக் கண்டம் பாயக் கூடிய சில ராக்கெட்டுக்களை அழிக்காமலேயே வைத்திருக்கிறார் என்றும் அவர் கூறினார்.

நீண்ட காலம் பொறுத்திருக்க முடியாது என்று கூறிய அதிபர் புஷ், சதாம் ஹுசைன் அணு ஆயுதங்களை கைவிட மறுக்கிறார். ஐ.நா பாதுகாப்பு கவுன்ஷில் தனது நம்பகத் தன்மையை நிரூபிக்க இதுவே கடைசி சந்தர்ப்பம் என்றும் அவர் தெரிவித்தார். (பி)

## சீனாவில் நிலநடுக்கம் 94 பேர் உயிரிழப்பு

(பெய்ஜிங்)

சீனாவின் தொலை தூர மேற்குப் பகுதியில் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கத்தினால் குறைந்தது 94 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவில் ஷியாங்யாங் என்ற பகுதியில் கடுமையான அளவில் காலை 7.30 மணியளவில்இந்த நில நடுக்கம் ஏற்பட்டது.இது ரிச்சர்ட் அளவு கோலில் 6.8 அளவாகப் பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கத்தினால் பல வீடுகள் தரைமட்டமானதுடன், பலர் அந்த இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கின்றனர் என்றும்,

இதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.இதேவேளை, பலபேர் காயமடைந்துள்ளதாகத் தெரிகின்றது.

கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருப்பவர்களை மீட்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சீன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (பி-9)

## இந்திய நாடாளுமன்றத்திற்கு தீவிர இந்துக்கள் ஊர்வலம் செல்வர்

(புதுடில்லி)

அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தில் இராமர் கோவில் கட்டுவதற்கு இந்திய அரசாங்கம் அனுமதி வழங்காததற்கு எதிர்ப்புத் தெரிவித்து நூற்றுக்கணக்கான இந்துத் தலைவர்களும், குருமாரும் நாளை இந்தியப் பாராளுமன்றத்திற்கு ஊர்வலமாகச் செல்லவுள்ளனர்.

அயோத்தியில் இராமர் கோவிலைக் கட்டுவதற்கு தீவிரமாக இந்துக்கள் ஆரம்பித்துள்ள புதிய பிரசார நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக இந்த ஊர்வலம் நடைபெறுகிறது. நாளை 4 மாநிலங்களுக்கு சட்டசபைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இந்த ஊர்வலம் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (பி-2)

## பயங்கரவாதத்தின் மையம் பாகிஸ்தான்

### இந்திய வெளிவிவகார அமைச்சர்

(புதுடில்லி)

பாகிஸ்தான் பயங்கரவாதத்தின மையம் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் யத்வந்சிங்கா குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பாகிஸ்தானுடன் தற்போதைக்குப் பேச்சுவார்த்தை இடம் பெறப்பேவதில்லையென்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு, மலேஷியத் தலைநகரான கோலாலம்பூரில் நேற்று ஆரம்பமாகியது.

அதற்கு முன்னராக அங்கு நடைபெறும் அணிசேரா நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டத்தில் கலந்து கொண்ட யத்வந்சிங்கா ஊடகவியலாளர்களுடன் பேசிய போதே இவ்வாறு கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தான், இந்தியா உட்பட்ட உலகின் ஏனைய நாடுகள் சிலவற்றிற்கு பயங்கரவாதத்தை பாகிஸ்தான் ஏற்றுமதி செய்துள்ளது.

அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பாகிஸ்தானியர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை இதனை எடுத்துக் காட்டுகின்றதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# படைபலத்தை மேலும் பெருக்குவதில் இலங்கை இராணுவம் ஈடுபட்டு வருகின்றது

## தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க

(கொழும்பு)

**குடாநாட்டு உயர் பாதுகாப்பு வலயங்களை நாங்கள் நேரில் சென்று பார்வையிட்டபோது, அங்குள்ள சர்வதேச நிறுவனங்களின் உறுப்பினர்கள் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றக் கூடாது என்று பகிரங்கமாக எம்மிடம் தெரிவித்திருந்தனர்.**

**சுமார் 20 இலட்சம் வரையிலான நிலக்கண்ணிவெடிகள் இப்பிரதேசங்களில் புதையுண்டிருப்பதால் இங்கு மீளக் குடியேறுபவர்களின் உயிருக்கு உத்தரவாதமளிக்க முடியாது என்று அவர்கள் இதனை நியாயப்படுத்துகின்றனர்.**

தொழில் வேலை வாய்ப்பு அமைச்சரும் ஆளும் கட்சி பிரதான அமைப்பாளருமான மகிந்த சமரசிங்க இவ்வாறு கொழும்பு தமிழ் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த சமரசிங்க மேலும் தெரிவித்திருப்பதாவது,

இராணுவத்தினரும் பாதுகாப்புக் குறித்து உத்தரவாதம் அளிக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளனர்.

ஏனெனில் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டாலும் ஆயுதங்களைக் களையவில்லை.

விடுதலைப் புலிகள் ஆயுத சேகரிப்பில் இன்னும் ஈடுபடுகின்றனர். இராணுவமும் படைபலத்தைப் பலப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

தற்போது பலாலி விமான் நிலையத்தைச் சூழ்ந்துள்ள பிரதேசத்தை எடுத்துக்கொண்டால், அங்கு உயர் பாதுகாப்பு வலயம் ஒன்று உள்ளது. அந்தப் பகுதியில் குடியேற மக்களுக்கு அனுமதி வழங்கினால், விமானங்கள் தரையிறங்க இடையூறாக இருக்கும் என படையினர் தெரிவிக்கின்றனர். இது போன்று பல விடயங்களையும் நாம் அவதானிக்க வேண்டியுள்ளது.

பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லாது விட்டால் உயர் பாதுகாப்பு வலயங்களை வைத்துக் கொண்டிருக்கும் அவசியம் அரசாங்கத்துக்கு இல்லை என்று தெரிவித்த மகிந்த சமரசிங்க மேலும் கூறுகையில்,

இனவாதக் கட்சியும், அடிப்படை வாதக் கட்சியுமான ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இந்த அபகீர்த்தியைப் பெற்றுள்ளது.

இந்தக் கூட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலத்தைப் பாதிக்கும்.

ஸ்ரீ.சு.க. தனது வரலாற்றுப் பெருமைகளை மறந்து ஒரு பிராந்தியக் கட்சியாக செயற்படும் அபாயத்தை எட்டியுள்ளது.

இந்த இரு கட்சிகளினதும் கூட்டினால் ஜே.வி.பி.க்கு பலமான ஒரு அத்திபாரம் கிடைக்கும் அதேவேளை ஸ்ரீ.சு.க.வில் பிளவுகளே ஏற்படும்.

இந்தப் பிளவை நோக்கமாகக் கொண்டே ஜே.வி.பி.செயற்படுகின்றது.

அது மட்டுமன்றி இந்தக் கூட்டினால் ஸ்ரீ.சு.க.வுக்குள்ள தேசிய ரீதியிலான மதிப்பு, கௌரவம் அனைத்தும் மோசமாகப் பாதிக்கப்படும்.

ஆனால் அரசியல் ரீதியாகப் பார்த்தால் பொ.ஐ.மு-ஜே.வி.பி கூட்டு எமக்குச் சாதகமானது. எமக்குப் பலமான எதிர்க் கட்சி ஒன்று இருப்பது அவசியமாக இருக்கின்றது.

எமது எதிர்க்கட்சி மிகவும் பலவீனமாக இருப்பது ஜனநாயகத்திற்கு அழகல்ல. இந்த ஸ்ரீ.சு.க-ஜே.வி.பி. கூட்டுக் குறித்து ஸ்ரீ.சு.க.யில் பலர் அதிருப்தி அடைந்துள்ளார்கள். அவர்கள் இந்தக் கூட்டை வெறுப்பதாக எம்மிடம் கருத்துக் கூறியிருக்கிறார்கள்.

மேலும் ஜே.வி.பி.யுடன் இணைந்து ஸ்ரீ.சு.க. முனைவதானது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை எட்டுவதை ஸ்ரீ.சு.க. விரும்பவில்லை என்ற அர்த்தத்தை வெளிப்படுத்தும்.

ஜே.வி.பி.யுத்தத்தை விரும்புகின்றது. யுத்தத்தை விரும்பும் கட்சியுடன் ஸ்ரீ.சு.க.கூட்டு வைத்துக் கொண்டால், ஜே.வி.பி.யின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே ஸ்ரீ.சு.க. செயற்பட வேண்டிய கட்டாய நிலைமை ஏற்படும் என்று குறிப்பிட்டர்.

தொடர்ந்தும் கூறுகையில்,



மகிந்த சமரசிங்க

நாம் தேர்தலுக்குத் தயாராகவே இருக்கின்றோம். தேர்தலைச் சந்தித்து அமோக வெற்றிபெற்று மீண்டும் ஆட்சி அமைப்போம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

ஆனால் இந்தப் பொதுத் தேர்தலின் சுமையை மக்களால் தாங்கிக் கொள்ள முடியாது.

மீண்டும் ஒரு பொதுத் தேர்தலை மக்கள் விரும்பவில்லை என்பதை நாம் தெளிவாகவே புரிந்து கொண்டுள்ளோம் என்று குறிப்பிட்டார். (உ)

# ஐ.நா.மனித உரிமைகள் அதிகாரி அடுத்த வாரம் யாழ். விஜயம்

(கொழும்பு)

அரசு-புலிகளிற்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை எட்டப்பட்ட ஒரு வருட காலப்பகுதியில் மனித உரிமை விடயங்களில் இலங்கையில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் குறித்து ஆராய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான அதிகாரி இயன் மார்டீன் அடுத்த மாத ஆரம்பத்தில் இலங்கை வரவுள்ளார்.

இலங்கைப் பயணத்தின்போது, யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் இயன் மார்டீன், தற்போதைய அமைதிச் சூழ்நிலையில் மனித உரிமைகளைப் பேணும் விடயங்களில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் குறித்து இங்கு பலதரப்புக்களுடனும் ஆராயவுள்ளார்.

இதேவேளை, 6 ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தை அடுத்த மாதம் ஜப்பானில் இடம்பெறும் போது மனித உரிமை விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளதும், அதில் இவர் கலந்துகொண்டு தனது அனுபவத்தின் அடிப்படையில் கருத்துக்களை முன்வைக்கவிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கானதோர் முன்னேற்பாடாக இவரது இலங்கை விஜயம் அமைகின்றது. (உ)

# செய்தியாளர்களுக்கு இலவச பஸ் சேவை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு ஏனைய பகுதிகளைச் சேர்ந்த செய்தியாளர்களை இலவசமாக அழைத்துச் செல்வதற்கு தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

சமாதான முன்னெடுப்புக்களின் பின்னர் வட-கிழக்குப் பகுதிகளின் உண்மை நிலைவரங்கள் தென்பகுதி மக்களுக்கு மூடி மறைக்கப்பட்டு முரண்பாடான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவதைத் தவிர்க்கும் முகமாகவே இந்நடவடிக்கையை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் எடுக்கவுள்ளது.

இந்த வகையில், பத்திரிகையாளர்களுக்கென வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு நாளாந்தம் இரு பஸ் வண்டிகள் இலவச சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. (உ)


## தரம் 7 மாணவர்களே!
## 'முயற்சியின் பயன்'

என்ற தலைப்பில் 150 சொற்களுக்குள் கட்டுரை எழுதி 28.02.2003 இற்கு முன் வலம்புரிக்கு அனுப்பி வையுங்கள்.

**கட்டுரையுடன் இதனை இணைக்கவும்.**

**கட்டுரைப் போட்டி இல-2**

மாணவர் முழுப் பெயர் :------------------------------
பாடசாலை :------------------------------
கற்கும் தரம் :------------------------------

**உறுதிப்படுத்துகிறேன்**

------------------------
வகுப்பாசிரியர்


# சிறுவர்களைக் கையாளுதல் பயிற்சிப் பட்டறை 3 தினங்கள்

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களைக் கையாளுதல் என்ற தலைப்பில் சிறுவர் இல்ல உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்று இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாட்கள் மணிக்கூட்டு வீதியில் உள்ள கூட்டுறவுப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிறுவர்களின் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் குறித்து நடைபெறவுள்ள மேற்படி பயிற்சிப் பட்டறை மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினரின் ஏற்பாட்டில் சிறுவர் பாதுகாப்புக் குழுவினரின் ஏற்பாட்டில் சிறுவர் பாதுகாப்பு (ஐ.சி) அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து சிறுவர் இல்லங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பங்குபற்ற விருப்பதுடன் இது தொடர்பான தகவல்கள் கிடைக்காத சிறுவர் இல்லங்கள் அல்லது நிறுவனங்கள் உடன் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினருடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (உ-27)



சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் யாழ்.நகர மண்டபத்தில் இடம்பெற்ற மீள நினைவூட்டல் கருத்தரங்கில் எடுக்கப்பட்ட படம். படம் : க.பவன்

## விளையாட்டுப் போட்டி

(தனங்கிளப்பு)

a h/நாவற்குழி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 2 மணிக்கு பாடசாலை அதிபர் பி.முத்துலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.


இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதனும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக் கழக உடற்கல்வித்துறை விரிவுரையாளர் மா.இளம்பிறையனும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-37)

## சமுர்த்தி வங்கி திறப்பு

(ஊர்காவற்றுறை)

நாரந்தனை தெற்கில் அமைக்கப் பட்டுள்ள ஊர்காவற்றுறை சமுர்த்தி வங்கித் திறப்பு விழா நாளை புதன்கிழமை ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் என்.சிவபாதசுந்தரம் கலந்து கொள்ளவுள்ளார். (உ-75)



யா/கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலய மாணவர்கள், ஆசிரியர் ஒன்றிணைந்து அண்மையில் கல்விப் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டபோது பிடிக்கப்பட்ட படம்.

படம் : சண்டிலிப்பாய் நிருபர்

# வளர் இளம் பருவத்து மன நோய்களை மாற்ற அவர்களின் இசைவான ஒத்துழைப்பு அவசியம்

வளர் இளம் பருவத்தில் ஏற்படும் மன நல பாதிப்புகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 1. சிறு குழந்தையாக இருக்கும்போதே இருக்கும் மன நலப்பாதிப்புகள் மற்றும் நோய்கள், 2.புதிதாக வளர் இளம் பருவத்தின் போது ஆரம்பமாகும் மன நல பாதிப்புகள் மற்றும் நோய்கள், 3.பிரத்தியேகமாக வளர் இளம் பருவத்திற் கென்றே ஏற்படும்சில முக்கியமான அறி குறிகள்.

வளர் இளம் பருவத்தின் போது ஏற்படும் பாதிப்புகள் மிகமிக அதிகம் எப்போது கணக்கெடுத்தாலும் எந்த கலாசாரத்தில் கணக்கொடுத்தாலும் 10லிருந்து 20 விழுக்காடு அளவிற்கு வளர் இளம் பருவத்தினர் இத்தகைய பாதிப்புக்குள்ளாகிறார்கள். வளர் இளம் பருவத்தின் ஆரம்பத்தில் சிறுவர் சிறுமியரிடையே வித்தியாசம் இல்லை. அதேசமயம் வளர் இளம் நங்கைகளுக்குப் பாதிப்பு அதிகமாக்காணப்படுகிறது. கிராமங்களை ஒப்பிட்டுப்பார்க்கும் போது நகரங்களில் காணப்படும் இளம் பருவத்தினரிடையே இரு மடங்காக இந்தப் பாதிப்பு இருந்து வருகிறது.

### குழந்தைப்பருவத்திலிருந்து தொடர்ந்து வரும் பாதிப்புக்கள்

குழந்தைப் பருவத்தில் ஏற்படும் கோளாறுகள் அக் குழந்தைகள் வளர்ந்து வரும் போது தொடர்ந்து இருந்து வருகிறது. அதிலும் உடற்கூறு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் இருப்பின் அவை நிரந்தரமாகி விடுகின்றன. இதில் மிக முக்கிய மானவை அறிவுத்திறன் வளர்ச்சிக் குறையாகும் நடத்தைக் கோளாறுகள், உணர்ச்சி சம்பந்தப்பட்ட மனக் கிளர்ச்சி நோய்கள் மற்றும் ஊடுருவிப்பரவும் மன நோய்கள் ஆகியவை தொடந்து வளர் இளம் பருவத்திலும் காணப்படுகிறது.

### வளர் இளம் பருவத்தில் புதிதாக ஏற்படும் பாதிப்புகள் மற்றும் நோய்கள்

இந்தப் பாதிப்புகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.(அ) வளர் இளம் பருவத்தில் ஏற்படும் மன அழுத்தம் சம்பந்தப்பட்ட கோளாறுகள், (ஆ) இளவயதில் ஏற்படும் நோய்களே சீக்கிரமாக வளர் இளம் பருவத்திலேயே அறிமுகமாகி விடுதல்.

### வளர் இளம் பருவத்தினால் ஏற்படும் மன அழுத்தம் சம்பந்தப்பட்ட கோளாறுகள்

வளர் இளம் பருவத்தின் போது இது தான் வரையறுக்கப்பட்ட நடத்தை அல்லது நடவடிக்கை என்று உறுதியாகக் கூறமுடியாது. ஏனெனில் இவர்களைக் குழந்தையாகக் கருதி ஒதுக்க முடியாது. விவரமானவர்கள் என்று சேர்த்துக் கொள்ளவும் முடியாது. இந்த இரண்டும் கெட்டான் நிலையினால் ஒரு ஸ்திரத் தன்மையும்,தனித்துவமும் இல்லாமையால் ஏற்படும் குழப்பந்தான். எனவே இவர்களின் நடவடிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் இவர்களைச்சுற்றியுள்ள சூழலோடு அவ்வளவு இலகுவாக ஒத்துப் போகாது. அதனால் அவர்களுடைய கணிப்பில் நியாயமான நடவடிக்கைகள் கூடசுற்றுச்சூழலுக்கு நடத்தைக் கோளாறுகளாகக் காணப்படலாம். எனவே பலவிதமான நடத்தை சம்பந்தப்பட்ட கோளாறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. வீட்டை விட்டு ஓடிப் போதல், திருடுதல், கூட்டாமாகச் சேர்ந்து அட்டூழியம் செய்தல், சண்டித்தனம்,செய்தல்,எதிர் மறைவாதம், சொல் கேளாமை மற்றும் பலவிதமான,

**மருத்துவ விளக்கம்**

தற்காலிகமான மன நலப் பாதிப்புக்குள்ளாகிறார்கள். இதற்குக்காரணம் மன அழுத்தம்தான்.

இந்தச் சூழலிலும் காலகட்டத்திலும் தான் பள்ளி, கல்லூரியைத் தவிர்த்து மற்ற விஷயங்களில் ஈடுபடுதல், மட்டமடித்தல் ஆகியவை இருக்கும். மனம் மற்றும் எண்ணச் சுழற்றி நோயாகிய **Obsessive Compulsive disorder** பெரும்பாலும் வளர் இளம் பருவத்தில் தான் ஆரம் பிக்கிறது. இதற்கு பல விதமான உடற்கூறு சம்பந்தப்பட்ட மற்றும் சுற்றுச் சூழல் சம்பந்தப்பட்ட மாற்றங்களும் காரணமாக அமைவ தகடலஹிரன ஆய்வுகள் மூலம் கண்டறியப் பட்டுள்ளது.

### சீக்கிரமாகவே இந்தப் பருவத்தில்அறிமுகமாகும் மன நோய்கள்

மனச் சிதைவு மற்றும் மனச் சோர்வு ஆகிய இரண்டு முதிர் மன நோய்களும் இந்தக் காலகட்டத்தில் அறிமுகமாக வாய்ப்புகள் அதிகம்.மேலும் இவை வளர் இளம் பருவத்தில் ஆரம்பமாகும் போது இருக்கும் அறிகுறிகளிலிருந்து சற்று மாறுபட்டிருக்கும்.எனவே நிதானத்துடனும்அனுபவத்துடனும் சோதித்துப் பார்க்கும் போது இவைகளை இனம் கண்டு கொண்டுதக்க நிவாரணம் அளிக்க முடியும்.

### பிரத்தியேகமாக வளர் இளம் பருவத்தினரிடையே காணப்படும் அறிகுறிகள்

இவற்றைப் பொதுவாக இரண்டு வகையாகப் பிரிக்கலாம். 1. போதைப் பொருட்களுக்கு பழக்கமாகுதல்,2. பாலியல் சம்பந்தப்பட்ட கோளாறுகள்

**டாக்டர் மா. திருநாவுக்கரசு M.D.(psy)**

இதில் போதைப் பொருட்களுக்குப் பழக்கமாகுதல். இன்று உலகத்தையே உலுக்கிக் கொண்டிருக்கும் தீவிரமான விஷயமாகும். இவைகளில் மிக முக்கியமானது பாலியல் சம்பந்தப்பட்ட சந்தேகங்களும் அனுமானங் களும் மற்றும் அவர்களுள் பாலியல் நிர்ணயமும் மிக முக்கிய மானதாகும்.

### சிகிச்சைமுறை

வளர் இளம் பருவத்தினரை அணுகி சிகிச்சையளிப்பது ஒரு தனிக்கலையாகும்.இலகுவில் இவர்களை ஒப்புக் கொள்ளவைக்க முடியாது. அவர்களின் ஒத்துழைப்பைப்பெற்று மாற்றம் செய்விப்பதென்பது மிக மிக கடினமான காரியமாகும். இருப்பினும் நாசூக்காகவும் நுணுக்கமாகவும் அணுகினால் நல்ல ஒத்துழைப்பைப்பெறமுடியும்.புரிந்துகொண்டு ஒத்துழைப்புத்தர முன் வந்தால் எத்தகையமாற்றங்களையும் மிக எளிதாகச் செய்ய முடியும். □

---

# சமஷ்டித் தீர்வுகுறித்து அரசு- புலிகள் தெளிந்த நிலைப்பாட்டைக்கொண்டுள்ளனர்

(கொழும்பு)



அதிகாரப் பகிர்வு ஆட்சிமுறை குறித்து யோசனைகள் சர்வதேச நாடுகளின் அனுபவங்களை அடிப்படையாக வைத்து தயாரிக்கப் படவுள்ளன.

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சமஷ்டி ஆட்சி முறையிலான புதிய அரசியலமைப்பை உருவாக்குவது குறித்து தெளிவான நிலைக்கு வந்துள்ளனர்.

இவ்வாறு அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் போராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்ற அரசாங்க சமாதான ஆணைக்குகுழு அமைப்பு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந் நிகழ்வில் தொடர்ந்து கருத்துக் கூறிய அமைச்சர்,

உலக நாடுகளில் அனுபவங்களுடன்,எமது நாட்டின் தேவைகளுக்கு ஏற்பவே இவ்அரசியல் அமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

சகல சமூகத்தினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பூரண அரசியல் அமைப்புச் சட்டமொன்றை அரசாங்கம் கொண்டுவரவுள்ளது.

இது சம்பந்தமாக சகல சமூகங்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காகவே அரசாங்க சமாதான ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் முன்னெடுத்துச் செல்லப் படும் சமாதானம் தற்போதைய காலகட்டத்தில் மிகவும் தேவையானது.

இதற்காக பல நாடுகளிலும் சென்று பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது. நமது நாட்டில் உள்ள அனைத்து இன மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் அமைப்பொன்றை உருவாக்க வேண்டும். அதற்கான அத்திபாரத்தை முதலில் இட வேண்டும் என்றார்.

தற்போதைய சமாதான முயற்சிகளை உலக நாடுகள் பலவும் பாராட்டியுள்ளன. இதனைப்புரிந்து கொள்வது சில அரசியல் கட்சிகள் தமது சுயலாபம் கருதி அதனை எதிர்க்கும் போராட்டங்களில் ஈடுபட்டு வருவது வருந்தத்தக்கவிடயமாகும் எனவும் அமைச்சர் அங்கு சுட்டிக் காட்டியுள்ளார். (உ-8)

---

# நிரந்தர அரசியல் தீர்வுக்கான ஆரம்ப உடன்படிக்கை

## விரைவில் கைச்சாத்தாகும்

(கொழும்பு)

நிரந்தர அரசியல் தீர்வுக்கான ஆரம்ப உடன்படிக்கை ஒன்று விரைவில் கைச்சாத்திடப்பட விருப்பதாக தெரிகிறது.

இதற்கான ஏற்பாடுகளில் நோர்வே தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக சமஷ்டி ஆட்சிமுறையை ஏற்படுத்துவது தொடர்பாக அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுவாத்தைகளின் போது இணக்கப்பாடு காணப்பட்டது.

எதிர்வரும் மாச் மாதம் 8 ஆம் திகதி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ள அடுத்த சுற்று பேச்சுவார்த்தையின் பின்னர், இவ் உடன்படிக்கை கைச்சாத்திடப்படலாம் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் உடன்படிக்கையைமையமாகக் கொண்டே சமஷ்டி ஆட்சி முறையில் எவ்வாறு அதிகாரங்கள் பகிர்வது என்பது தீமானிக்கப் படவுள்ளது.

வடகிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பொருளாதார நிலைமைகளை சீர்செய்யவும் முதலீடுகளை அதிகரிக்கச் செய்யும் வகையிலும் இவ்வாறான உடன்படிக்கைக்குரிய ஏற்பாடுகள் இடம் பெற்றுவருகின்றன. (உ-3)

## மக்கள்தொடர்பு அலுவலகம்

(திருநெல்வேலி)

தமிழர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் மக்கள் தொடர்பு அலுவலக வடமராட்சிக்கிளை எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித் துறையில் திறந்து வைக் கப்படவுள்ளது. (உ-43)

---

## புலிகளைச் சந்திக்க

# காலதாமதமாகச் சென்ற சிவாஜிலிங்கம் எம்.பி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இடம் பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொள்ளச் சென்ற யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தினை முகமாலையில் உள்ள ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் நீண்ட நேர விசாரணையின் பின்னரே கிளிநொச்சி செல்ல அனுமதித்ததாக தெரிவிக்கப் படுகிறது.

நேற்று முன் தினம் கிளிநொச்சி அரசியல் துறை நடுவகப் பணியகத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளுவதன் பொருட்டு சென்ற சமயம் முகமாலைப் பகுதியில் உள்ள ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் நாடாளு மன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தினை நீண்டநேரம் விசாரித்ததுடன் காலதாம தமாகவே கிளிநொச்சி செல்ல அனுமதித்ததாக கூறப்படுகின்றது.

இதனால் அவர்காலதாமதமாகவே மேற்படி கலந்துரையாடலில் பங்குபற்றினார் எனவும்தெரியவருகிறது. (உ-10)

---

# முஸ்லிம் எம்.பிக்கள் பிரதமர் சந்திப்பு இன்று

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம் பிரதிநிதிகள் தனிப் பிரிவாக கலந்துகொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் வடக்கு-கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்த 17 முஸ்லிம்பாராளுமன்ற உறுப்பினர்கள்இன்று மாலை பிரதமரைச்சந்திக்கவுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாகஇக்குழுவினர் நோர்வே பிரதிநிதிகளுக்கு ஏற்கனவே விளக்கிக்கூறியுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்த12பாராளுமன்றஉறுப்பினர்களும் தேசியஜக்கியமுன்னணியைச்சேர்ந்த3 பாராளுமன்ற உறுப்பினர்களும் வடக்கு-கிழக்கு பிரதேசங்களின் ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த இரு முஸ் லிம் உறுப்பினர் களும் இச் சந்திப்பில் பங்கு கொள்ளவுள்ளனர். (உ-8)

---

## மின் கட்டணத்தை தபாலகங்களில் செலுத்தலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையால் வழங்கப்படும் மின் பட்டியலுக் குரிய கட்டணங்களை இன்று தொடக்கம் சகல தபாலகங்களி லும் ஏற்றுக் கொள்ளநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இச் சேவையினை சகல தபாலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ். சிவராஜசிங்கம் அறிவித்துள்ளார். (உ-3)

## 24 வது சேவை தினம்

(தென்மராட்சி)

உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனமாகிய அறவழிப்போராட்டக் குழுவின் 24 வது ஆண்டு சேவைதினம் இன்றாகும்

இதனை முன்னிட்டு இந் நிறுவனம் இன்று கைதடி சைவச் சிறுவர் இல்லத்திலுள்ள சிறுவர்களுக்கு மதிய போசனம் வழங்குவதுடன் இல்லத்துக்கு சில அன்பளிப்புகளையும் வழங்கவுள்ளது. (உ 3)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப்பிரதேச ஒருங்கிணைணப்புக்குழுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப.10மணிக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில்இடம்பெறவுள்ளது. (உ-75)

## 'பங்குச் சந்தை' கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பங்குச் சந்தை தொடர்பான கருத்தரங்கு ஒன்று எதிர் வரும் மாதம் 7,8 ஆம் திகதிகளில் யாழ். பலநோக்குக்கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். வணிகர் கைத்தொழில் அமைப்பின் அனுசரணையுன் இலங்கைக் கைத்தொழில் மன்ற கூட்டமைப்பினரால் நடத்தப்படும் இக் கருத்தரங்கு 7ஆம்திகதியன்று பி.ப. 2.00 மணிதொடக்கம் 5.15மணி வரையும்8ஆம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரையும் இடம்பெறவுள்ளது.

இதில் க.பொ.த. உயர்தர வணிகத் துறை ஆசிரியர்களையும் ஏனைய ஆர்வமுள்ளவர்களையும் கலந்துகொள்ளுமாறுகேட்கப்பட்டுள்ளது. (உ-4)

## சமாதான வழிபாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். நாவாந்துறை கொட்டடிப் பங்கில் உள்ள முத்துப்பேறு பெற்ற யோசவ்வாஸ் அப்போஸ்தலரின் சிற்றாலயத்தில் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 5.00 மணிக்கு இலங்கை கத்தோலிக்க திருச்சபை ஆயர்களால் கூட்டுத் திருப்பலியும் சமாதான வழிபாடும் நடத்தப்படவுள்ளது. (உ)

## சமுர்த்தி வங்கித்திறப்பு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நெல்லியடியில் அமைக்கப் பட்ட சமுர்த்தி வங்கித் திறப்பு விழா இன்று மு.ப. 11.30 மணிக்கு பிரதேச செயலர் எஸ். கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ,சிறப்பு விருந்தினராக யாழ்.சமுர்த்தி உதவி ஆணையாளர் எஸ். சிவபாதசுந்தரம் கலந்துகொள்ளவுள்ளார். (உ-7)

# விழிப்புடன் இருக்குமாறு வடக்கு-கிழக்கு கட்டளை அதிகாரிகளுக்கு இரகசிய உத்தரவு

(கொழும்பு)

வட-கிழக்குப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள படைகளை விழிப்புடன் இருக்குமாறு படைகளின் கட்டளை அதிகாரிகளுக்கு இரகசியமான முறையில் உத்தரவு வழங்கப் படடிருப்பதாக செய்திகள் வெளிவர ஆரம்பித்துள்ளன.

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்பாடு ஒரு வருடம் பூர்த்தியாகி உள்ள நிலையில் வட-கிழக்குப் பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்தே இராணுவ தலைமைப்பீடம் இவ் உத்தரவை வழங்கியுள்ளதாக தெரியவருகின்றது.

இவ் உத்தரவையடுத்தே வட-கிழக்குப் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.


இதேவேளை,இராணுவக் கட்டுப் பாட்டுபிரதேசங்களில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள், நடமாட்டங்கள், அவர்களின் செயற்பாடுகள் குறித்து விரிவான புலனாய்வுத் தகவல்களை திரட்டுமாறும் இராணுவப் புலனாய்வுப் பணியகம் உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தவகையில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள நுழைவோர் தொடர்பாக தீவிர கவனம் செலுத்துமாறும், தேவைப்படுவோரை விசாரணைக்கு உட்படுத்துமாறும் முன்னரங்க சோதனைச் சாவடிகளில் நிலை கொண்டுள்ள இராணுவப பிரிவினர்க்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குடாநாட்டில் வீதி ரோந்துப் பணிகளில் படையினர் மீண்டும் ஈடுபட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, படையினரின் மேற்படி இரகசிய உத்தரவில் போருக்குத தயாராகுவது போன்ற நடைமுறைகளைப் பின்பற்றவேண்டாம் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளதாம். (உ-3)

நல்லை ஆதீனத்தில் நேற்று நடந்த சர்வமத பிரார்த்தனைக் காட்சிகள்




## மாணவர்களுக்கு நன்கொடை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை எல்லைககுள் 2000,2002 ஆண்டு க.பொ.த உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கும் 2002ம் ஆண்டு 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களுக்கும் நல்லூர்ப் பிரதேசசபை நன்கொடை வழங்கத் திட்டமிட்டுள்ளது.இதற்குத் தகுதி உடையவர்கள் தமது சான்றுகளுடன் விண்ணப்பங்களை எதிர் வரும் மார்ச் மாதம் 31ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும்,மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பிரதேச சபைத் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் நல்லூர் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (5)

# எழுதுநர் பதவிக்கு ஆட்சேர்ப்பு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 98 பேருக்கு மார்ச் 3 முதல் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண எழுதுநர் மற்றும் அதனோடு இணைந்த சேவைகளுககு ஆடசேர்ப்புச் செய்வதற்காக அண்மையில் நடதத்பபட்ட நேர்முகப் பரீட்சைப்பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 98 பேருக்கு எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

நியமனம் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட அனைவரும் எதிர் வரும் 3ஆம் திகதி முதல் திருகோணமலை உப்புவெளியில் அமைந்துள்ள மாகாணப் பொது நிர்வாக அமைச்சின் விருத்தினர் விடுதியில் ஒரு நாள பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளது.

பயிற்சி வகுப்புகளில் வைத்தே இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளதாகவும், சம்பந்தப்பட்டவர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப் பட்டிருப்பதாகவும் மாகாண பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், அமைச்சின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

நியமனம் பெறவுள்ளவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

எஸ். தர்சினி (திருநெல்வேலி), ரி. தாரிணி (துன்னாலை மேற்கு, கரவெட்டி), எம்.ரமணன் (இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி), ரி. வளர்மதி (உடுவில் தெற்கு, மானிப்பாய்), கே. பரமேஸ்வரன் (இயற்றாலை, வறணி), கே. கதிர்காமர் (மாரியம்மன் வீதி, திருநெல்வேலி), என். சுபாசினி (சங்கானை), கே. பிரசன்னா (கரவெட்டி மேற்கு, கரவெட்டி), எ.எச். தர்ஷிகா (நெல்லியடி, கரவெட்டி), ஆர்.கவிதா (உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்), ரி.மதிலகன் (அரசடி வீதி, யாழ்ப்பாணம்), ரி. காயத்திரி (திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்), கே. கௌசல்யா (அரியாலை, யாழ்ப்பாணம்), ஆர். சாமினி (வைத்தியசாலை வீதி, சங்கானை), ஆர். இளங்குமரன் (புலோலி தெற்கு, புலோலி), ஜி.காயத்திரி (சுதுமலை தெற்கு, மானிப்பாய்), எம். அருண்ராஜ் (யாழ்ப்பாணம்), என்.வளர்மதி (புலோலி மேற்கு), பி.அகல்யா (கந்தர்மடம், யாழ்ப்பாணம்), ஆர். இரத்தினேஸ்வரி (கோப்பாய்மத்தி), ஆர். சுபோதினி (யாழ்ப்பாணம்), கே. மைதிலி (யாழ்ப்பாணம்), எஸ். தயாபரன் (கல்வியங்காடு), எஸ். அபிராமி(உடுப்பிட்டி), வி. தர்ஷினி (தும்பளை பருத்தித்துறை), வை. சிவகலா (பருத்தித்துறை), இ. ரமணன் (கரணவாய் தெற்கு,), ஜெ. அமலா (இளவாலை), கே. றொபினா உதயந்தி (யாழ்ப்பாணம்), கே. பிரதீபன் (உடுவில்), கே. சிவநந்தினி (கொக்குவில்),ஆர். சுதர்ஷினி (யாழ்ப்பாணம்), என். கௌசலாதேவி (யாழ்ப்பாணம்), பி.ஜசீலா (கொக்குவில் மேற்கு), பி.பிரதீபன் (சிவன்பண்ணைறோட், யாழ்ப்பாணம்), ரி.கணேஸ்வரன் (மருதனார்மடம்), யூ. தவபாலன் (யாழ்ப்பாணம்),வி.சிவகுமாரி (கரவெட்டிமத்தி), எஸ்.மாதினி (கரவெட்டி தெற்கு), ஏ. தட்ஷாயினி (உடுவில்), கே. சிந்துஜா (உடுவில்), கே.கே. நிதியா (வரணி), எம்.ஜெயந்தன் (புத்தூர் கிழக்கு), பி. சுதர்ஜிஜா (புலோலி மத்தி பருத்தித்துறை), எஸ். ஜெயச்சித்திரா (சுன்னாகம்), எஸ். உமாகாந்தன் (துன்னாலை கரவெட்டி), எஸ். தர்மிளா (கொடிகாமம்), எஸ். லக்ஷிதா (கொக்குவில் மேற்கு), எஸ். கஜந்தினி (மல்லாகம்), ரி.மலர்மதி (உடுவில் தெற்கு), ரி.தாரிணி (யாழ்ப்பாணம்), ரி. சர்மிளா (கந்தர் மடம்), ரி. சுதர்சன் (கோண்டாவில்), ரி.தேவகி (வல்வெட்டித்துறை), எ.வனிதா (பருத்தித்துறை), எம்.தயாபரன் (மல்லாகம்), என்.ரமரூபன் (நீர்வேலி), என். அபிராமி (சுன்னாகம்), பி.சுபாஜினி (கந்தர்மடம்), பி.யசோதரா (வட்டுக்கோட்டை), எஸ். சத்தியநாராயணன (யாழ்ப்பாணம்), எஸ்.சசிக்காந் (யாழ்ப்பாணம்), எஸ். சுதர்ஜன் (இளவாலை), ரி.முகுந்தன் (அத்தியடி), ஜி.ஜனீவா (யாழ்ப்பாணம்), கே.ஜெயலக்ஷ்மி (அரியாலை), கே.குகதீபன் (உடுவில் மேற்கு), கே. கலைவாணி (திருநெல் வேலி வடக்கு), கே. அம்பிகாலினி (நீர்வேலி), என்.தனுஜா (கரவெட்டி), என். சோபனா (கொக்குவில்), பி. சிவதர்சினி (கொக்குவில்), பி.சியாமினி (அளவெட்டி), ஆர். கணேஷாராணி (கோப்பாய்), எஸ். பிரேமினி (மகாதமா வீதி),எஸ். ஜீவகன் (மே/பா. எஸ். நாகராசா 52/9 லோட்டஸ் றோட்), எஸ். வரதராஜன் (சுண்டுக்குளி), ரி. ரதிக்கா (கரணவாய் வடக்கு), ரி. வதனா (துன்னாலை கரவெட்டி), எஸ். குணசிங்கம் (உரும்பிராய் கிழக்கு), கே. ராஜராஜேஸ்வரி (சாவகச்சேரி), என். ரஜிதா (சண்டிலிப்பாய்), ஆர். சாமினி (யாழ்ப்பாணம்), எஸ். துஷ்யா (கொக்குவில் மேற்கு), எஸ்.சக்தி (கந்தர்மடம்), எஸ். சிவதர்ஷினி (யாழ்ப்பாணம்), ரி. குமாரதாஸன் (பருத்தித்துறை), வி.ரி. துஷ்யந்தி (கரவெட்டி தெற்கு), என். ரஞ்சனா (சாவகச்சேரி), கே. அனிதா (உடுவில்கிழக்கு), கே. அனுஷா (நெட்டிலிப்பாய்), கே. பிரனாளினி (கொக்குவில் கிழக்கு), கே. பிரதீபன (கரவெட்டி கிழக்கு), ஆர். ரஜீவ் (கந்தர் மடம்), எஸ். சுபோதினி (சுழிபுரம்), எஸ். மயூரன் (வட்டுக்கோட்டை) எஸ். கலைவாணி (கொக்குவில்), எஸ். பாமினி (சுன்னாகம் தெற்கு).(உ)

# சுணனிக்ள் கொள்வனவில் நிதி வீண் விரயம்

(கொழும்பு)

அரச திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள் மற்றும் அமைச்சுக்களுக்குத் தேவையான கணனி இயந்திரங்கள் கொள்வனவின் போது அரசாங்க நிதி வீண் விரயம் செய்யப் படுவது குறித்து கணக்காய்வுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளதாக திறைசேரி செயலாளர் சரித்த ரத்வத்தே தெரிவித்துள்ளார்.

இந்நிலையை தடுக்கும் பொருட்டு சொத்துக்கள் பதிவேடு ஒன்றை தயாரித்து அதனை நடைமுறைப்படுத்துமாறு திறைசேரி செயலாளர் சரித்த ரத்வத்த சகல திணைக்களங்களுக்கும் ஆணையிட்டுள்ளார்.

இதேவேளை இயந்திரங்களைப் புதிதாக கொள்வனவு செய்தல், பழுதுபார்த்தல் மற்றும கழித்தொதுக்குதல் என்பனவற்றின் போது அரசாங்க நிதிப் பிரமாணங்களைக் கண்டிப்பாக கடைப்பிடிக்குமாறு திணைக்களத் தலைவர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

(உ-3)

# மாணவர் மத்தியில் சீரிய பண்புகளை வளர்க்க வல்ல விளையாட்டுப் போட்டிகள்

## -அமைச்சர் மகேஸ்வரன்-

(கோப்பாய்)

நாட்டில் சாந்தியும் சகோதரத்துவமும மலர அனைத்து மக்களும் பிரார்த்தனை செய்யவேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.



இவ் விடயத்தில் இனமத பேதமின்றி எல்லோரும் பங்களிக்க வேண்டும் என இந்து சமய விவகார அமைச்சர் தி. மகேஸ்வரன் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் இ. குணநாதன தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மகேஸ்வரன் தொடர்ந்து உரையாற்றுகையில்,

விளையாட்டுப் போட்டிகள் சிறந்த வீரர்களை தோற்றுவிக்கும் அதேவேளையில் சகிப்புத் தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வெற்றியில மமதை கொள்ளாமை. தோல்வியில் மனம் தளராமை போன்ற சீரிய பண்புகளை உருவாக்குகின்றன.

இப்பண்புகள் மூலமே நாட்டின் நற்பிரஜைகளை உருவாக்கமுடியும என்பது யாவரும் அறிந்ததே என்று குறிப்பிட்டார்.

இக்கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தை புதிதாக புனரமைக்க தமது அமைச்சு,நிதியை ஒதுக்கித தருவதாகவும் இதன் வெற்றிக்கு சமூகம் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-79)

## அழுகிய அப்பிள் பழங்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகர் சந்தையில் கடந்த வியாழனன்று அழுகிய நிலையில் 5 பெட்டிகளுக்குள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த அப்பிள் பழங்களை மாநகரசபையின் பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பரீட்சித்த போது அவை மனித பாவனைக்கு உதவாதவையெனக் கண்டறியப் பட்டதையடுத்து அவற்றை அழித்துள்ளார். (உ)

## இன்று ஒரு தகவல்

# குருபக்திதான் சிறந்தது

''பக்தி மூன்று வகைப்படும்'' என்கிறார் பெரியவர் திருமுருக கிருபானந்த வாரியார். தெய்வ பக்தி, அடியார் பக்தி, குருபக்தி, அடியார் பக்தியை விட, தெய்வ பக்தியை விடக் குருபக்திதான் மிகவும் சிறந்ததென்கிறார் அவர். தெய்வத்திடம் செய்த பாவம் குருநாதரிடம் தீருமாம். குருநாதரிடம் செய்த பாவம் தெய்வத்திடம் தீராதாம்.

ஒரு காடு. அங்கே அயோததௌமியர் என்று ஒரு தபோதனர். அவர் பல மாணவர்களை ஒன்று சேர்த்து ஒரு குருகுலம் நடத்திக் கொண்டிருந்தார். பல திறப்பட்ட மாணவர்கள் அதில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தார்கள். பாஞ்சாலஇராஜகுமாரன் ஒருவனும் அந்தக் குருகுலத்திலே சேர்ந்து படித்துக் கொண்டிருந்தான். அவன் பெயர் ஆருணி. பெரிய இடத்துப் பிள்ளைகளாயினும் படிப்பில் மிகவும் கெட்டிக்காரனாக இருந்தான். அவன் தான் அங்கே முதல் மாணவன்.

ஒரு நாள் ஒரு குருநாதர் அந்த அரச குமாரனைக் கூப்பிட்டார். நமது குருகுலத்திற்குச் சொந்தமான வயலில் தண்ணீர் பெருகிப் பயிரை அழிக்கிறது. ஆகவே நீ போய் மடையை அடைத்து விட்டு வா என்றார். அந்த அரச குமாரன் உடனே புறப்பட்டான். நான் பெரிய இடத்துப் பிள்ளை ஆயிற்றே! இராஜகுமாரன் ஆயிற்றே! மிகவும் செல்வாக்கோடு வளர்ந்தவன் ஆயிற்றே! நான் போய் வயலில் இறங்கி வேலை செய்வதா? என்றெல்லாம் அவன் நினைக்கவில்லை. குருநாதர் கட்டளையை நிறைவேற்ற வேண்டியது நமது கடமை என்று நினைத்தான்.

உடனே ஒரு மண்வெட்டியைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான். வயலுக்குப் போனான். பார்த்தான். தண்ணீர் கரையை உடைத்துக் கொண்டு வயலுக்குள் வேகமாகப் பாய்ந்து கொண்டிருந்தது. இவன் மண்வெட்டியால் களி மண்ணைப் புல்லோடு சேர்த்து வெட்டிப் பத்தை பத்தையாகப் போட்டான். இருந்தாலும் மடையை அடைக்க முடியவில்லை. தண்ணீர் வேகமாக வயலுக்குள் போய்க் கொண்டேயிருந்தது. போடுகிற பத்தையெல்லாம்கரைந்து கரைந்து போய்க் கொண்டிருந்தது. இருந்தாலும் இவன் தன் முயற்சியைக் கைவிடவில்லை. வெட்டி வெட்டிப் போட்டுக் கொண்டே இருந்தான். காலையில் அங்கு போனவன் மாலை வரையும் இப்படியே செய்து கொண்டிருந்தான். உடலும் மனமும் மிகவும் சோர்ந்து போய் விட்டன. இருந்தாலும் குருநாதர் இட்ட கட்டளையை நிறைவேற்றாத நான் இன்னும் இருக்க வேண்டுமா? என்று யோசித்தான். என்ன செய்யலாம் என்று பார்த்தான்.

நமது குருநாதர் இட்ட பணிக்காக இந்த உடம்பையே தியாகம் பண்ணலாம் என்று முடிவு பண்ணினான்- தண்ணீர் பாய்கிறது அல்லவா? அதற்குக் குறுக்கே விழுந்து மடையை அடைத்துக் கொண்டு படுத்து விட்டான். இது மற்றவர்களுக்குத் தெரியாது. அன்று இரவு ஒரு விளக்கின் முன்னால் உட்கார்ந்து குருநாதர் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். முதல் வரிசையில் இருக்கக் கூடிய இராஜ குமாரனைக் காணவில்லை. ''ஆருணி எங்கே?'' என்று மற்ற மாணவர்களை விசாரித்தார்.

சுவாமி! அவன் காலையில் வயலுக்கு மடையை அடைப்பதற்காகப் போனான். இன்னமும் திரும்பி வரவில்லை என்றான் ஒரு பையன். குருநாதர் உடனே ஒரு தீவட்டியை எடுத்துக் கொண்டு மாணவர்கள் புடைசூழ வயலுக்குப் போனார். அங்கே போய்ப் பார்த்து ஆளைக் காணவில்லை. ஆருணி, ஆருணி என்று சத்தம் போட்டுக் கூப்பிட்டுப்பார்த்தார். நான் இங்கே இருக்கிறேன் குருநாதா! என்று காலுக்கு அடியிலிருந்து சத்தம் கேட்டது. குனிந்து பார்த்தால் அவன் மடையிலே படுத்து இருக்கிறான். என்னப்பா இது? என்றார் குருநாதர்.

காலையிலிருந்து இந்த மடையை அடைத்துப் பார்த்தேன் சுவாமி! முடியவில்லை. அதனால் இப்படிக் குறுக்கே படுத்து விட்டேன். என்னைத் தாண்டுவதற்குப் பயந்து தண்ணீரே தேங்கி நின்று விட்டது. என்றான் ஆருணி. அவனுடைய குருபக்தியையும், அவனைத் தாண்டுவதற்கு அஞ்சி நிற்கிற தண்ணீர்த் தேக்கத்தையும் பார்த்து எல்லோரும் ஆச்சரியப்பட்டுப் போனார்களாம். ஆருணி! எழுந்து வா என்று அழைத்தார் குருநாதர். அவன் தண்ணீரைப் பிளந்து கொண்டுஎழுந்து வந்தான். அதனால் அவனுக்கு உத்தாலகன் என்று பெயர் வந்ததாம். உத்தாலகன் என்றால் தண்ணீரைப் பிளந்தவன் என்று பொருள்.

அந்த உத்தாலகன் மாதிரி இந்தக் காலத்து மாணவர்களுக்கும் குருபக்தி வேண்டும் என்று ஒரு பள்ளிக் கூடத்தில் சொன்னேன். உடனே நிறைய மாணவர்கள் எழுந்து நின்றார்கள். சார் ! நீங்கள் எங்களை இன்னமும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றுநினைக்கிறோம். அன்றைக் காவது ஒருவன் அப்படியிருந்தான். இன்று ஏகப்பட்ட உத்தாலகர்கள் இருக்கின்றோம். எங்கள் உபாத்தியாயர் கட்டளையிட்டால் இப்பொழுதே அது மாதிரி வயலுக்குப் போய் மடையிலே குறுக்கே படுத்துக் கொள்ள இந்த வகுப்பிலேயுள்ள அத்தனை பேரும் தயாராக இருக்கிறோம் என்றார்கள்.

அப்படியா? என்று மிகவும் சந்தோஷமாகக் கேட்டேன். ஒருவன் வெகு அடக்கமாக எழுந்தான். ஆமாம் சார்... வகுப்பிலே பாடம் கேட்பதை விட மடையிலே படுத்துக்கிடப்பது ஒன்றும் கஷ்டமான காரியமாக இருக்காது சார் என்றான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# ஐக்கிய தேசிய கட்சியில் இணையும் வைபவம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், எஸ்.பி.திஸாநாயக்கா, மகிந்த விஜயசேகர, லக்ஷ்மன் கிரியல்ல, பிரதியமைச்சரான ஜே.விஜய கோன் ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களாக இணையும் வைபவம் மார்ச் மாதம் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கண்டியில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தின் போது இவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் இருந்து உறுப்புரிமைப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

மேற்படி அமைச்சர்கள் பொது ஜன ஐக்கிய முன்னணியில் இருந்து பிரிந்து வந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-3)

# புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஜி. ரி. சற். புனரமைப்புத் திட்டங்கள்

## முத்தரப்பு கூடி இணக்கம்

(கொழும்பு)

ஜேர்மன் அரசாங்கத்தின் வட மாகாண புனரமைப்புக்கான உதவித் திட்டம் குறித்த முத்தரப்பின் முக்கிய ஆராய்வு கடந்த வெள்ளியன்று கொழும்பில் இடம்பெற்றது.

இதில், லிடுதலைப்புலிகளின் பிரமுகர் தூயவன் மற்றும் ஜேர்மன் அரசாங்கத்தூதுக்குழுவினர் பங்கு கொண்டனர்.

நிதியமைச்சில் இடம்பெற்ற இச்சந்திப்பில், அரச சார்பில் நிதியமைச்சின் செயலாளர் சரிச்சந்திரவத்த, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியேற்றுகை அமைச்சின் செயலாளர் ஏ.ஜெயரட்ணம் உட்பட ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

ஜேர்மன் அரச சார்பில் வெளி நாட்டமைச்சு அதிகாரி கெப்பன் பேர்க், இலங்கையில் உள்ள ஜேர்மன் தூதரக அதிகாரிகள், ஜேர்மன் உதவி நிறுவனப்பிரதிநிதிகள், ஜி.ரி.சற் நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜேர்மன் உதவித்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்தும் இந்த மாநாட்டில் ஜேர்மன் அதிகாரிகளிடம் அறிக்கைகள் கையளிக்கப்பட்டன.

அரச கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கும் ஜி.ரி.சற் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும் என்ற புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஏ.ஜெயரட்ணத்தின் வேண்டுகோள் இச்சந்தர்ப்பத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதனைப் புலிகளின் பிரதிநிதி வரவேற்றதுடன், அதற்கான காரணங்களை எடுத்து விளக்கினார். (உ)

# அரசு–புலிகள் பேச்சின் போது அகதிகள் விவகாரத்தை விரிவாக ஆராய வேண்டும்

## லண்டன் நியூஹம் மாநகரசபை உறுப்பினர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது அகதிகள் விவகாரம் குறித்து விரிவாக ஆராயப்பட வேண்டும்.

லண்டன் நியூஹம் மாநகர சபை உறுப்பினரும், சட்ட ஆலோசகருமான போல் சத்தியநேசன் இவ்வாறு கேட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக போல் சத்தியநேசன் கருத்து வெளியிடுகையில்,

கடந்த காலங்களில் இலங்கையில் ஏற்பட்ட யுத்தம் காரணமாகவே மக்கள் நாட்டை விட்டு அகதிகளாக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

ஆனால் தற்போது ஏற்பட்டிருக்கும் சமாதானச் சூழலைக் காரணம் காட்டி பிரித்தானியாவில் இருந்து சுமார் 5 ஆயிரம் பேர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

ஆனால் இலங்கையில் நிரந்தர சமாதானம் இது வரை ஏற்படவில்லை. தற்போது அரசுபுலிகளுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது அகதிகள் விவகாரம் குறித்து இரு தரப்பும் உரிய முறையில் பேசவேண்டும்.

நாட்டில் நிரந்தரத் தீர்வு ஏற்பட்ட பின்னர், ஐரோப்பாவில் இருந்து மீள்குடியமரவரும் தமிழர்களுக்கு உரிய நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளை ஐக்கியநாடுகள் சபையின் சட்டதிட்டங்களுக்கு அமைய வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, ஐரோப்பிய நாடுகளில் இருந்து இலங்கைத் தமிழர்களை திருப்பி அனுப்புவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 28ஆம் திகதி லண்டனில் எதிர்ப்புப் பிரசாரக் கூட்டமொன்று நடைபெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## இராசி பலன்

**25. 02. 2003**

**(மாசி 13, செவ்வாய்)**

**நவமி** மு.ப 11.29வரை
**கேட்டை** மு.ப 10.55வரை
**இராகுகாலம்** 3.30-5.00
**சுபநேரம்** 11.00 - 12.30
**சித்தாமிர்தம்**

**மேடம்**
கட்டுப்பாடு, ஆரோக்கியக்குறைவு, புதிய சிந்தை, முயற்சி தாமதம்.

**இடபம்**
காரிய தடங்கல், பெரியோர் மனஸ்தாபம்,போசனசுகம், வாகனபயம்.

**மிதுனம்**
முயற்சி கைகூடும், போசனசுகம், அபூர்வ சந்திப்பு,தொழில்நன்மை.

**கடகம்**
நினைத்தகாரியம் கைகூடும், தனவரவு, தொழில் விருத்தி, சுவாரஸ்யம்.

**சிங்கம்**
புத்திரரால் கவலை, பிரயாணம், உடல் நலக்குறைவு, சொத்துப்பிணக்கு.

**கன்னி**
ரோகபயம், வேலைக்கஷ்டம், மாதா சுகம், தொழில் நன்மை.

**துலாம்**
வாக்குமேன்மை, தனலாபம்,காரிய அனுகூலம், சகோதரர் உதவி.

**விருச்சிகம்**
குடும்ப சுகம், தனவிரயம், உறவினர் வருகை, விவாதம்.

**தனுசு**
தெய்வசிந்தை, முயற்சி பலிதம், ஜன வசியம்,நல்லசம்பவம்.

**மகரம்**
பிரயாணம், சுபசெலவு, எதிபாராத நன்மை, முயற்சி தாமதம்.

**கும்பம்**
உஷ்ண நிலை, கீர்த்தி,பொருள் சேர்க்கை,காரிய அனுகூலம்.

**மீனம்**
சுபநிகழ்வு,உறவினர் சந்திப்பு,அதிக பிரயாசை, நல்லசெய்தி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

# மீள் நினைவூட்டல் கருத்தரங்கும் திட்டமிடலும்

(யாழ்ப்பாணம்)

மீள் நினைவூட்டல் கற்கை நெறியும் எதிர் காலத்திட்டமிடற் கருத்தரங்கும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை யாழ். சிற்றி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வை கொழும்பு சிறுவர் பாதுகாப்பு நிலைய திட்ட இணைப்பாளர் சாமினி அபயசேகர, யாழ்ப்பாண சிறுவர் பாதுகாப்பு நிலைய திட்ட இணைப்பாளர் ஜெ.தற்பரன் ஆகியோர் நெறிப்படுத்தினர்.

இந்நிகழ்வில் சிறுவர் எதிர்காலத்திற்கான சந்திப்பு மாநாடு மற்றும் தொடர்பாடல் ஒழுக்கம் தொடர்பான பூரண விளக்கமும் மேற்படி மாநாட்டுக்கான பிரதிநிதிகள் தெரிவும் இடம் பெற்றது.

இக்கருத்தரங்கில் 70 பேர் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது (உ-4)

# அத்துருகிரிய ம. வி. அதிபர் மனித உரிமை மீறல் மனுத் தாக்கல்

(கொழும்பு)

கல்வி அமைச்சின் இணைப்புச் செயலாளர் தன்னிடம் 38 பிள்ளைகளின் பெயர்களை உள்ளடக்கிய பல பட்டியல்களை அனுப்பி அவர்களை முதலாம் ஆண்டில் சேர்க்குமாறு கேட்கப்பட்டிருந்ததாகவும், அது நிறைவேறாததனால் கல்லூரிக்கு வந்து தன்னை அலுவலகத்தில் வைத்து தாக்கியதாகவும் தெரிவித்து அத்துருகிரிய மகாவித்தியாலயத்தின் அதிபர் தாக்கல் செய்திருந்த அடிப்படை மனிதவுரிமை மீறல் மனுவை உச்ச நீதிமன்றம் வெள்ளிக்கிழமையன்று ஏற்றுக் கொண்டது.

அதிபர் கே.பியதாச இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

2003ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் திகதி கல்வியமைச்சர் கருணா சேன கொடித்துவக்குவின் இணைப்புச் செயலாளர் பத்தேரிய 38 பெயர்கள் கொண்ட பட்டியலுடன் கல்லூரிக்கு வந்து அவர்களை முதலாம் தர அனுமதிக்காக ஏன் தெரிவு செய்யவில்லை எனக்கேட்டார்.

திணைக்களச் சுற்று நிருபத்தின் பிரகாரம் ஏற்கனவே அனுமதிகள் வழங்கப்பட்டு விட்டன என நான் கூறினேன். அதற்கு என்து கழுத்துப் பட்டியில் பிடித்து இழுத்து பத்தேரிய என்னைத் தாக்கினார்.

அவருடன் வந்தவர்கள் என்னை தடுத்து வைத்துக் கொண்டனர். கல்லூரியின் உபஅதிபரும், ஏனையோரும் வந்து என்னைக் காப்பாற்றினர் என்று அதிபர் பியதாச மனுவில் தெரிவித்துள்ளார்.

தான் ஒரு இருதய நோயாளி என்றும், கழுத்தில் காயம் ஏற்பட்டதென்றும் இதற்கு ஒன்பது நாட்கள் வைத்திய சாலையில் தங்கி சிகிச்சை பெற்ற தாகவும் தெரிவித்துள்ள அதிபர் தனது அடிப்படையுரிமைகள் மீறப்பட்டு விட்டதாகவும் இழப்பீடு தருமாறும் மனுவில் கோரியுள்ளார். (உ)

# உலக உணவு விவசாய ஸ்தாபன குழு வரும்

(யாழ்ப்பாணம்)

உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் அதிகாரிகள் குழு ஒன்று அடுத்த மாதம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளது.

இக்குழு வடக்கு-கிழக்கில் ஆரம்பிக்க வேண்டிய துரித விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் திட்ட வரைபு குறித்தும் குடா நாட்டுக்கு விவசாயத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் யாழ்.செயலகத்தில் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளது. (உ-7)

நவில் தொறும் நூல் நயம் போலும் பயில் தொறும் பண்புடையாளர் தொடர்பு -குறள்-

# வலம்புரி

## சர்வ மதப் பிரார்த்தனை

இலங்கையில் அமைதியும் சமாதானமும் வேண்டி சர்வமதப் பிரார்த்தனை நேற்றைய தினம் நல்லை ஆதீனத்தில் நடை பெற்றது. பௌத்த, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மத குருமார்கள் இணைந்து கூட்டாக நடத்திய சர்வ மதப் பிரார்த்தனை அனைத்து மதங்களிடையேயும் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்துவதற்கான பாதையாக அமைந்துள்ளது. ஒரு காலத்தில் இனவாதத்தை வளர்ப்பதில் அதிதீவிரமாக ஈடுபட்ட பௌத்த பிக்குகள் இன்று உண்மை நிலையை உணர்ந்துள்ளனர். தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும், அதனைத் தீர்ப்பதற்கு சமாதானமே ஒரே வழி என்ற உண்மையை பௌத்த பிக்குகள் உணர்ந்திருப்பது பெரியதொரு மனமாற்றம் என்றே கூறலாம்.

எனினும், அந்த மனமாற்றம் எல்லாப் பிக்குகளிடமும் ஏற்பட்டுள்ளதென்ற முடிவுக்கு வரமுடியாது.

குறிப்பாக ஜே.வி.பி சார்புடைய பௌத்த பிக்குகள் மற்றும் பிக்குகள் முன்னணியைச் சேர்ந்தவர்கள் இப்போதும் இனவாதத்தில் ஊறிப் போயுள்ளனர்.

இருபது வருட யுத்தத்தால் நாட்டில் இரத்த ஆறு ஓடிய போதிலும், கௌதம புத்தரின் போதனைகள் நினைவுக்குவராத பிக்குகளே இந் நாட்டிற்கு ஆபத்தானவர்கள்.

அவர்களின் எதிர்ப்புக்கள இருக்கும் வரை சமாதானப் பயிரின் வளர்ச்சி தடைப்படவே செய்யும். இத்தகைய பௌதத பிக்குகளிடையே மன மாற்றத்தை ஏற்படுத்துவது அவசியம். இதனைச் செய்ய வேண்டியவர்கள் வேறுயாருமல்ல. சமாதானத்தின் அவசியத்தை உணர்ந்து- சர்வமதப் பிரார்த்தனையில் கலந்து கொண்ட பௌத்த பிக்குகளேஅதனைச் செய்ய வேண்டியவர்கள். சமாதான சர்வமதப் பிரார்த்தனைகள் நடத்தினாலும, தென்னிலங்கையில் உள்ள இனவாதப் பிக்குகள் இருக்கும் வரை சமாதானப் பயணம் வேகமாகச் செல்லுமெனக் கூற முடியாது.

எனவே, ஒருபுறத்தில சர்வமதப் பிரார்த்தனைகள் நடை பெறும் போது மறுபுறத்தில் சமாதானத்திற்கான ஆதரவுப் பிரசாரங்களும் தென்னிலங்கையில் நடதத்தப்பட வேண்டும். தென்னிலங்கை மக்கள் மத்தியில் சமாதானத்தின் ஊற்று புடைத் தெழுகின்ற போதே இனவாதிகள் தமது நிலை பற்றிச் சிந்திப்பார்கள். எனினும் சமாதானத்திற்கு ஆதரவான பௌத்த பிக்குகள் சமாதானத்தை வலியுறுத்தி தென்னிலங்கை மக்களிடையே பிரசாரம் செய்வதாகத் தெரியவில்லை.

வெறுமனே சர்வமதப் பிரார்த்தனைகள் சமாதானத்தில் பெரியதொரு சாதனையைச் செய்து விடுமென எதிர்பார்க்க முடியாது இதனை பிக்குகள் உணர வேண்டும்.

# ஈராக் மீது தொடுக்கப்படும் போர் உலகம் முழுவதையுமே பாதிக்கும்

ஈராக் அதிபர் சதாம் ஹுசேன் சதாரணமான ஒரு ஜனாதிபதியல்ல. தீர்க்கமான முடிவுகளோடும் துணிச்சலான செயல் திறன்களோடும் செயல்படும் ஒருவர். அவரது அமைச்சரவையில் இருப்பவர்கள் எவரையுமே இலேசில் அமெரிக்க ஏஜென்டுகளால் விலைக்கு வாங்கிவிட முடியாது. அதேபோல் ஈராக்கியப் பாராளுமன்றமும் அவர் நினைப்பதை நிறைவேற்றும் அமைப்பாக இருந்து வருகிறது. அண்மையில் நிகழ்ந்த தேர்தலில் சதாம் ஹுசேன் நிறுத்திய வேட்பாளர்கள் அபரமிதமான ஆதரவுடன் வெற்றிபெற்றார்கள்.

இதெல்லாம் உள்நாட்டு நிலவரம். அவர் ஒரு சர்வாதிகாரி. அதனால் மக்கள் அவருக்கு எதிராக செயல்பட அஞ்சுகிறார்கள். எதிர்த்தவர்கள் அங்கு இப்பொழுது இல்லை. பெரும் பாலானவர்கள் ஈராக்கை விட்டு வெளியேறி அவருக்கு எதிராக செயல்பட்டு வருகிறார்கள். அப்படியான ஒருவர் தான் அகமத் கலாபி என்பவர். இவர் தமது 12 வயதில் குடும்பத்துடன் ஈராக்கை விட்டு வெளியேறியவர். இங்கிலாந்தில் வாழ்ந்து வருகின்றார். சதாம் ஹுசேன் பதவி இழக்கும் வேளையில் அகமத் கலாபியை அப்பதவியில் அமர்த்தலாம் என்று அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் எண்ணியிருக்கின்றன.

இதற்கிடையில் சதாம் ஹுசேனை ஆயுதக்களைவு செய்யும்படி வற்புறுத்தவும் அதற்கு அவர் பணியாவிடில் ஈராக் மீது போர் தொடுக்க வழி செய்யக் கூடியதுமான புதிய தீர்மானம் ஒன்றை அடுத்த வாரம் ஐ.நா.பாதுகாப்புச் சபையில் அமெரிக்காவும் பிரிட்டனும் சமர்ப்பிக்கவிருக்கின்றன.

ஈராக் மீது ஆயுதப் போரை திணிக்காமல் ஆயுதக் களைவை சாதிக்க வேண்டும் என்றே பல நாடுகளும் கருதுகின்றன. ஈராக்கிடம் பேரழிவு ஆயுதம் உண்டு என்பதில் இவை கருத்து மாறுபடா விட்டாலும் போரை உடனடியாக ஆரம்பிப்பதையே எதிர்க்கின்றன.

### சரியான தகவல் இல்லை

பேரழிவு ஆயுதங்களைக் கண்டு பிடிப்பதற்காக ஈராக்கிற்குச் சென்ற ஐ.நா. பரிசோதகர்களுடன் அவர்கள் எதிர்பார்த்த அளவில் ஒத்துழைக்க வில்லையென பரிசோதகர்களே தெரிவித்துள்ளனர்.

1998 ஆம் ஆண்டுக்குப் பிறகு தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் பற்றிய சரியான தகவல்களை ஈராக் வழங்கவில்லை என்பது குற்றச்சாட்டு. இந்த ஆயுதங்களுக்கு என்ன நடந்தது என்பதை ஈராக்கிய அதிகாரிகளும் தெரிவிக்கவில்லை. அது பற்றி விஞ்ஞானிகளையும் சுதந்திரமாக விசாரிக்க முடியவில்லை என்று சோதனையாளர்கள் கூறியுள்ளனர்.

விஞ்ஞானிகள் விசாரிக்கப்பட்ட போது அதிகாரிகள் கூடவிருந்தார்கள் அல்லது அவர்கள் சொல்வது நாடாவில் பதியப்பட்டது என்று பரிசோதகர்கள் கூறியுள்ளனர்.

இதற்கிடையில் யு.எஸ்.யு-2 விமானங்கள் ஈராக்கிற்கு மேலாகப் பறந்து உழவு பார்ப்பதற்கு ஈராக் அனுமதித்துள்ளது. இதேபோன்று ஜேர்மன், ரஷ்ய விமானங்களும் பறந்து கண்காணிக்கவிருக்கின்றன. அதே சமயம் பேரழிவு ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படுவதைத் தடைசெய்து உத்தரவொன்றையும் அதிபர் ஹுசேன் விடுத்துள்ளார். இவை ஈராக் ஆயுதக் கண்காணிப்பாளர்களுடன ஈராக்கியர் ஒத்துழைப்பதற்கான அறிகுறிகள் தான் என்றாலும், அவர்கள் நல்ல மாதிரியாக ஒத்துழைக்கின்றார்கள் என்று பாதுகாப்பு சபைக்கு அறிவிக்கும் அளவுக்குப் போதுமானவையாக இல்லையென்பது சோதனையாளர்களில் ஒருவர் கூறியுள்ளார்.

1998 ஆம் ஆண்டு ஐ.நா.ஆயுத சோதனையாளர்கள் ஈராக்கிலிருந்து வெளியேறியதன் பின்னர் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுதங்களுக்கு என்ன நடந்தது என்பதே இப்போதுள்ள கேள்வியாகும்.

அந்த இடைவெளியில் தயாரிக்கப் பட்டிருக்கக் கூடிய ஆயிரக்கணக்கான இரசாயன தோட்டாக்கள், குண்டுகள், அந்திராக்ஸ் இரசாயன மூலகங்கள் எல்லாம் எங்கே போய் விட்டன என்ற கேள்வி பெரிதாக எழுந்துள்ளது.

ஆயுத சோதனையாளர்களின் முந்திய அறிக்கையில், ஈராக் ஆயுதக் களைவு குறித்து சோதனையாளர்களுடன் ஒத்துழைக்கக் கூடும் என்ற நம்பிக்கை தொனித்ததால் பிரான்ஸ் ஈராக் மீதான தாக்குதலை எதிர்க்கத் தொடங்கியது. முதலில் ஆயுதத் தாக்குதலை ஆதரித்து வந்த ரஷ்யாவும் எதிர்க்கத் தொடங்கியது. ஜேர்மனியும் இவர்களுடன் சேர்ந்து கொண்டது. அதனால் அமெரிக்காவின் நிலை சங்கடத்துக்குள்ளாகியது. இன்னொரு தீர்மானத்தை பாதுகாப்பு சபை நிறைவேற்றும் வரை அமெரிக்கா காத்திருக்க இணங்கிப் போயிற்று.

### உலக மக்கள் காட்டிய எதிர்ப்பு

இதற்கிடையில் ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து உலகெங்கும் பல்வேறு நாடுகளிலும் 60 லட்சத்துக்கு மேலான மக்கள் ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றார்கள். இதனால் ஊக்கம் பெற்றுள்ள ஈராக்கிய அதிபர் என்ன செய்வாரென்று சொல்ல முடியாது.

இந்த வாரம் ஆயுதப்பரிசோதகர்கள் தமது அடுத்த அறிக்கையை பாதுகாப்பு சபையில் சமர்ப்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அறிக்கையைத் தொடர்ந்து என்ன நடக்கும் என்று சொல்வது கஷ்டம். அதிபர் சதாம் ஹுசேன் ஆயுதப் பரிசோதகர்களிடம் எவ்வளவு தூரம் ஒத்துழைக்கப்போகிறார் என்பதையும் பொறுத்தே ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அடுத்த தீர்மானம் அமையும்.

இந்தத் தீர்மானத்தை ரஷ்யா, பிரான்ஸ் நாடுகள் எதிர்ப்பதும் ஆதரிப்பதும் ஈராக்கின் நடத்தையிலேயே தங்கியுள்ளது.

### முழு உலகும் பாதிக்கப்படும்

ஈராக் மீதான யுத்தம் ஆரம்பமாகும் பட்சத்தில் அது ஆப்கானிஸ்தானில் நடந்தது போல் அந்த நாட்டோடு முடிந்து விடும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் ஈராக்கின் தற்போதைய ஆட்சியாளர்களிற்கு அந்நாட்டு மக்கள் பெரும்பாலும் ஆதரவாகவே இருந்து வருகின்றார்கள். அதேபோல் சுற்றியுள்ள நாடுகள் எல்லாமே ஈராக்கிற்கு மாறானவை என்று கூற முடியாது. சவூதி அரேபியா, ஜோர்டான், சிரியா,

ரமேஸ்

துருக்கி, ஈரான் போன்ற நாடுகள் ஈராக்கைச் சுற்றியுள்ளன. இவைகளில் இரண்டொன்றைத் தவிர ஏனையவை ஈராக்கை ஆதரிக்கவில்லை. இந்த நிலையில் போர் தொடுக்கப்படுமானால் இந்த நாடுகளில் நிலை கொண்டுள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று ஈராக் ஏற்கனவே அறிவித்துள்ளது. ஈராக் மறைத்து வைத்ததாகக் கூறப்படும் உயிரி மற்றும் இரசாயன ஆயுதங்கள் தயவு தாட்சண்யமின்றி பயன்படுத்தப்படும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே ஈராக்கை அமெரிக்கா தாக்குமானால் அது ஈராக்கை இனியும் தலை தூக்க முடியாத படியான ஒரு தாக்குதலாகவே இருக்க முடியும். இல்லையெனில் உலகம் முழுவதையுமே இந்தப் போரின் தாக்கம் எதிர்பார்ப்பதைவிட மோசமாகப் பாதிக்கும் என்று சொல்லத் தேவையில்லை. (பி)

# புரிந்துணர்வு ஒப்பந்தம் வரலாற்றுத் திருப்பம்

## அலிஸாகிர் மௌலானா

(கொழும்பு)

சமாதான முயற்சிகளின் யதார்த்த நிலையினை மூடி மறைத்து குறுகிய அரசியல் லாபங்களுக்காக நாட்டு மக்களை தவறான வழியில் திசை திருப்ப தென்னிலங்கையில் உள்ள சில தீய சக்திகள் முனைவதாக பிரதமரின் கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் ஆலோசகர் அலிஸாகிர் மௌலானா குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் அவர் கருத்துக் கூறுகையில்,

தென்னிலங்கையில் வாழும் மக்கள் அனுபவிக்கும் உரிமைகளையும் சலுகைகளையும் வடக்கு-கிழக்கிற்கு முன்னரே வழங்கியிருந்தால் எமது நாட்டில் கொடிய யுத்தத்தையும் வீணான உயிரிழப்பையும் தவிர்த்திருக்கலாம் என்பதை அனைத்துத் தரப்பினரும் தற்போது ஏற்றுக்கொண்டுள்ளனர்.

ஆயினும் தென்னிலங்கையில் வாழும் சில தீய சக்திகள் தமது குறுகிய அரசியல் லாபங்களுக்காக நாட்டு மக்களைத் தவறான வழிக்குத் திசை திருப்ப முனைகின்றன என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த காலங்களில் பாதுகாப்பு காரணங்களைக் கூறி வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தடை செய்யப்பட்டு வந்த பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளக் கூடிய சாதகமான சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது என்பதையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேபிரபாகரன் ஆகியோரிர் கிடையே அண்மையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் வரலாற்றின் திருப்பமாக அமைந்துள்ளது என்பதையும் அலிஸாகிர் மௌலானா சுட்டிக்காட்டினார். (உ-10)

## திசைரி தியானம்

## இறைஅறிவு

தன்னலமற்ற சேவை பாவங்களையும், தீய செயல்களையும் அழிக்கிறது. மனத் தூய்மையைத் தருகின்றது. இறைவனைப் பற்றிய அறிவானது தூய்மையான மனத்தில் எழுகிறது. இறைவனைப் பற்றிய அறிவே விடுதலை பெறுவதற்கு நேரடியான வழியாகும். நெருப்பின்றிச் சமைக்க முடியாது. அது போலக் கடவுளைப் பற்றிய அறிவின்றி விடுதலை இல்லை. கருமை செறிந்த இருளைப் போக்கும் ஒளி போல, அறிவானது நிச்சயமாக அறியாமையைப் போக்கும்.

சுவாமி சிவானந்தர்

# ஓய்வூதியக் கொடுப்பனவு முறைப்பாடு குறித்து விசாரணை

(கொழும்பு)

ஓய்வூதியக் கொடுப்பனவுகளையும் ஊழியர் சேமலாப நிதிகளையும் வழங்குவதில் இடம்பெற்ற பாரபட்சங்கள் குறித்து தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு விசாரித்துள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து சுமார் 320 முறைப்பாடுகள் குறித்து கிடைத்ததையடுத்தே ஆணைக்குழு இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

கொழும்பு, கண்டி, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இருந்தே இத்தகைய முறைப்பாடுகள் அதிகளவில் செய்யப்பட்டிருந்ததாகவும், அது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை ஆகிய பகுதிகளில் இருந்து ஒரு முறைப்பாடேனும் கிடைக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-10)

# பாரிசவாத நோய்க்கு உடற்பயிற்சியே மருந்து

## நோய் ஒழிப்புச் சங்கத் தலைவர்

(கொழும்பு)

இலங்கையில் ஏற்படும் மரணங்களுக்கான காரணங்களில் பாரிசவாத நோய் மூன்றாவது இடத்தை வகிக்கின்றது என தேசிய பாரிசவாத நோய் ஒழிப்புச் சங்கத் தலைவர் டாக்டர் ஜகத் விஜியசேகர தெரிவிக்கிறார்.

தேசிய பாரிசவாத நோய் ஒழிப்பைக் குறிக்கும் முகமாக நேற்று முன்தினம் கொழும்பு நகர மண்டப வளவில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இவர் இதனைத் தெரிவிததார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

உலகெங்கிலும் ஒவ்வொரு வருடமும் ஒருகோடி 80 லட்சம் பேர் பாரிசவாத நோயிற்கு பலியாகி வருகின்றனர்.

புகைபிடித்தல், மதுபானம் அருந்துதல் என்பவற்றின் மூலமும் இந்நோய் வருவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

அத்துடன், இது தொற்று நோயாக அமையாதமையினால் அதனை வருமுன் தடைசெய்வது சிரமமாக இருக்கிறது.

ஆயினும் போதியளவு உடற் பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் இந் நோயில் இருந்து விடுபடலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-10)

## பெயர் மாற்றம்

(கொழும்பு)

''பொது வைத்திய கள உதவியாளர்'' என்ற பதவியை ''பொது வைத்திய கள அலுவலர்'' எனப் பெயர் மாற்றம் செய்வதற்கு பொது நிர்வாகப் பணிப்பாளர் அனுமதி அளித்துள்ளதாக சுகாதார, போசாக்கு மற்றும் நலன்புரி அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி ரெஜி பெரேரா அறிவித்துள்ளார். (உ)

# அனுருத்தவுக்கு மருத்துவ வசதி மேல் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

உடத்தலவின்ன படு கொலை வழக்கின் முதலாது எதிரியான முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைசசா் அனுருத்த ரத்வத்தைககு மருத்துவ வசதிகளை வழங்குமாறும் அவரை கொழும்பு அரசாங்க வைத்தியசாலையில் அனுமதிக்குமாறும் மேல் நீதிமன்ற நீதிபதிகள் எரிக் பஸநாயக்கா,திபாளி விஜயசுந்தரா,சுனில் ராஜபக்ஷ ஆகியோர் உத்தரவிட்டனர்.

நேற்றைய விசாரணையின் போது ரத்வத்தையின் உடல் நலக் குறைபாட்டை எடுத்துக் காட்டி அவருக்குப் பிணை வழங்குமாறு அவரின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஆர்.ஐ.ஒபயசேகர மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.இந்த மனு நிராகரிக்கப்பட்டது.

விசாரணையின் போது வாதத்திற்கு இடமளிக்கும் ஆவணங்களைபரிசோதனை செய்த அதிகாரி தேசப்பிரிய களுபஹன சாட்சியமளித்தார்.

தனது சாட்சியத்தில் தேர்தல் காலப் பகுதில் பிரிகேடியர் தம்மித்த மற்றும்மேஜர் சமரசேகரா ஆகியோர் பயன்படுத்திய குறிப்புப்புத்தகத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவித்தார்.நாட்கள், திகதிகள் போன்ற விபரங்கள் மாற்றப்பட்டிருப்பதாகவும் களுபஹன தெரிவித்தார். விசாரணைகள் இன்றும் தொடரவுள்ளது. (இ)

# தமிழீழ தேசிய விளையாட்டு விழா
# வெற்றிக் கேடயங்கள் இரண்டை யாழ்.அணிகள் தட்டிக் கொண்டன

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நடைபெற்று வரும் இரண்டாவது தமிழீழ தேசிய பெரு விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடை பெறவுள்ளது.

நேற்று நடைபெற்ற யாழ்,மன்னார் அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டிகள் இரண்டில் வெற்றிவாகை சூடிய யாழ்.அணி வெற்றிக் கேடயங்கள் இரண்டை தனதாக்கிக் கொண்டன.

வலைப் பந்துப் போட்டிக்கான மேஜர் சோதியா ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்தையும்,கரப் பந்துப் போட்டிக்கான மேஜர் அல்பேட் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்தையுமே யாழ்.அணிகள் சுவீகரித்துக் கொண்டன.

இன்று நடை பெறும் கேணல் சங்கர் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான 20 ஓவர்களைக் கொண்ட மென் பந்து இறுதிப் போட்டியில் மட்டு. திருமலை அணிகள் மோதுக்கின்றன.

லெப்டினன் கேணல் விக்ரர் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான உதை பந்தாட்ட இறுதிப் போட்டியில் மன்னார் திருமலை அணிகள் மோது கின்றன. (த)

## யாழ்ப்பாணத்தில்....

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் மீளக்குடியமா்வதற்கு அஞ்சுகின்றனர். ஏன் எனில் அவர்களின் இருப்புக்கும் உரிமைக்கும் எந்த உத்தரவாதமும் வழங்கப்பட வில்லை.

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் வாழ்வதற்கு எழுத்து மூலமான ஒரு உத்தரவாதம் வழங்கப்பட்டாலேயே முன்னர் வாழ்ந்தது போல இங்கு தமிழர்களுடன் ஒற்றுமையாக வாழ முடியும்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் கட்சிகளுக்கிடையே நிலவும் பிளவுகள் மீண்டும் ஓர் யுத்தத்தை தோற்றுவித்தால் முஸ்லிம் மக்களின் நிலைமை என்ன? அவர்கள் எங்கே போவது என்றுஅச்சமடைந்துள்ளனர்

முஸ்லிம்களின் அவல நிலையை சகல தரப்பினரும் மனிதத்தன்மையுடன் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் காசிம் மேலும் தெரிவித்தார்.(இ-4)

## பல்கலை மாணவர் ஒன்றிய உறுப்பினர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய நிர்வாக உறுப்பினர் குழுப் படம் எடுக்கும் நிகழ்வு நாளை மாலை 5.30மணிக்கு நடை பெறவுள்ளது.அனைத்து நிர்வாக உறுப்பினர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு ஒன்றியத் தலைவர் கே.பரணீதரன் கேட்டுள்ளார். (த-5)


## உடன் தேவை

* **பத்திரிகை விநியோகஸ்தர்கள்**

பத்திரிகை விநியோகிப்பதற்கு சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் நேரில் வரவும்

வலம்புரி
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

-ஆளணி முகாமையாளர்-

## இந்திய ஜோதிடர் யாழ்- விஜயம்

ஸ்ரீ சோடாநிகரை பகவதி அம்மன் அருள் பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்திய பரம்பரை ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத் தடையா? தொழிற் பிரசசினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எவ்வித பிரச்சினைகளுக்கும் தக்கபரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

**மணிசாமி P.T.R**

பாண்டீஸ்வரி அம்பாள் அம்மா

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி,

இல. 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்)
பார்வையிடும் நேரம் : காலை 9 மணி முதல் மாலை 4.00 மணிவரை.

[C/5522]

## யாழ்ப்பாண மாநகர சபை

பழைய பொருட்கள் ஏல விற்பனை

யாழ்ப்பாண மாநகர சபையினால் பாவிக்கப்பட்ட பழைய பொருட்கள் 27.02.2003 அன்று மு.ப. 9.00மணிக்கு நல்லூர் இந்து விடுதி வளவில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. இவற்றை அன்றைய தினம் காலை 8.00 மணியிலிருந்து பார்வையிடலாம்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை மாநகர சபை அலுவலகத்திலும், ஏனைய அரச திணைக்கள விளம்பரப் பலகையிலும் பார்வையிடலாம்.

*மாநகர சபை,*
*யாழ்ப்பாணம்.*

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்

(C/5802)


# ஆஜராகுமாறு உத்தரவு

(கொழும்பு)

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன்னிலையில் வியாழக்கிழமை ஆஜராகுமாறு லஞ்ச ஆணைக் குழுவின் ஆணையாளர் கிங்ஸலி விக்கிரம சூரியாவுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

லஞ்ச ஆணைக்குழுவின் ஆணையாளருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணை செய்த கோட்டை நீதிவான் ஆணைக்குழுவின் புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பீற்றர் குணதிலகாவையும் நாளை ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளார். (வ)

## திருமலையில்....

களங்களை-நிலைகளை எடுத்துக் கொண்டனர்.இருதரப்பினருக்குமிடையில் வெறும் 50மீற்றர் இடைவெளியே இருந்தது.

ஆயுதங்களைப் பாவிப்பதற்கு இரு தரப்பினரும் தயார் நிலையில் இருந்ததாலும் இந்த மோசமான நிலை நல்லவிதமாக தவிர்க்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இனிமேல் இப்படி ஒரு நிலை எப்பொழுது ஏற்படும் என்பது தான் கேள்வியாக - கவலையாக இருக்கிறது .ஏனென்றால மேற்படி சம்பவம் நடந்த பகுதி போன்ற சில பகுதிகள் யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றன என்பதில் எந்த விதமான தெளிவும் கிடையாது. சம்பவம் நடை பெற்ற பகுதியை புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதி என்கிறார்கள். கடற்படையினர் தமது கட்டுப்பாட்டுப் பகுதி என்கிறார்கள். இதில் நிறைய கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன.இதற்கு தீர்வு காண வேண்டியது இருதரப்பும் தான். இருதரப்பும் பேசியே இதற்கு முடிவுகட்ட வேண்டும். இதனைச் செய்ய வேண்டியது கண்காணிப்புக் குழு அல்ல. அதற்கு நாங்கள் உதவியாக இருப்போம். எந்தப் பகுதி யாருக்குரியதென்பதை புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு 30 நாட்களுக்குள் வரை அறுக்க வேண்டும். ஆனால் அந்த எல்லைகளை வரைஅறுப்பதென்பது மிகக் கடினமான வேலை, அதுவும் காட்டுபபகுதி போன்ற இடங்களை வரையறுப்பது மிகமிகக் கடினமானது.

மேற்படி சம்பவத்தில் யார் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறினார்கள் என்பது சொல்ல முடியாதது.ஆனால் இரண்டுதரப்பும் செய்தது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உயிர்த்துடிப்பை அதன் அதிகார வரம்பை மீறும் செயலாகும்,இருதரப்புமே நிலைமையை மோசமான நிலைக்குத்தான் வளர்த்துக் கொண்டு போயிருந்தன என்றார். (வ)

## பக்தி பூர்வமாக....

ஒஸ் வேல்டி பீரிசும் இஸ்லாமிய மதம் சார்பாக மௌலவி எ.எம்.எம்.காசிமும் கலந்து கொண்டனர்

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் வழிபாட்டில் ஈடுபட்ட மதத் தலைவர்கள் அங்கிருந்து ஊர்வலமாக நல்லை ஆதீனத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

ஆதீனத்தில் இடம்பெற்ற சமாதானப் பிரார்த்தனையில் மதத் தலைவர்கள் ஆசி உரை நிகழ்த்தியதுடன் கூட்டுப் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர். இதேவேளை சமாதானத்தை விரைவு படுத்துமாறு வலியுறுத்தி பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு மதத் தலைவர்கள் அதிசங்கைக்குரிய மாதம்பக அஸ்வஜித் தேரரிடம் மகஜர்களையும் கையளித்தனர். (இ4,51)


## சிறு விளம்பரம்

**ENGLISH CLASSES**

**O/L,A/L,G.A.Q,B.A** மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆங்கிலம் இலகு முறையில், ஆரம்பம் 01.03.2003 (புதிய இடத்தில்)

K.சோமசுந்தரம்
சந்தை கிழக்கு ஒழுங்கை,
மானிப்பாய்

(6571)


# மேஜர் கதிரொளியின் இறுதி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் இடம் பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த கடற்புலி மேஜர் கதிரொளியின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நேற்று மாலை மாதகல் சென்.தோமஸ் றோ.க.த.க பாடசாலையில் இடம் பெற்றது.

மாவீரரின் தந்தை கிருஷ்ணபவான் ஈகச் சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தார்.இதனைத் தொடர்ந்து அஞ்சலி உரைகள் இடம் பெற்றன.

யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி உட்பட போராளிகள் பலர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர்.

மாலை 6.30மணியளவில் பாண்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் வித்துடல் விதைக்கப்பட்டது. (த)

## இனப்பிரச்சினை...

யுத்த நிறுத்த உடன் படிக்கையில் கைச்சாத்திட்டு ஒரு வருடம் பூர்த்தியான நிலையில் சிக்கல்களுக்கு மத்தியிலும் பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன.

புரட்சிகர அமைப்புக்களின் செயற்பாடுகளில் இருந்து பயங்கரவாதம் வேறுபட்டுள்ளது. சமூக பொருளாதாரம் நாட்டின் அதிகாரம் என்பனவற்றில் சீர்திருத்த மாற்றங்களை ஏற்படுத்துவதே புரட்சிகர அமைப்புக்களின் நோக்கமாகும்.

ஆனால் பயங்கரவாதம் இதற்கு எதிர்மாறானதாகும் எனவே பயங்கரவாதம் தோன்றுவதற்கான அடிப்படைக் காரணிகளைக் கண்டறிந்து அதற்கு ஏற்ப தீர்வு காண அனைத்து நாடுகளும் முன் வரவேண்டும்.

போதைப் பொருட்கள், ஆயுதக்கடத்தல்கள்,சர்வதேச குற்றச் செயல்கள்,சட்ட விரோத நிதி திரட்டுதல் சிறுவர்களை போரில் ஈடுபடுத்துல் போன்றவற்றை தடுத்து நிறுத்த கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், ஈராக் விவகாரத்தில் வெளிநாடுகளின் ஊடுருவல் இருக்கக் கூடாதென்பதே இலங்கையின் விருப்பமாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிடடார். (ம)

## கத்தோலிக்க....

பெர்ணான்டோ அடிகள் அதிவணக்கத்திற்குரிய றோமண்ட் பீரிஸ் அடிகளார் அதிவணக்கத்திற்குரிய எல்.லோய்பெரேராஅடிகள், அதிவணக்கத்திற்குரிய வின்சன் பெர்ணான்டோ அடிகளார், அதிவணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் ஆகியோருடன் அதி வணக்கத்திற்குரிய பொன் வேஸ்மென்டிஸ் அடிகளாரும் அதிவணக்கத்திற்குரிய தேவசகாயம் அடிகளாரும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில தொடரும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்து பேசப்பட்டது. இதேவேளை கத்தோலிக்க ஆயர்கள் குழு இன்று யாழ்ப்பாணத்தில் நடை பெறவுள்ள நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# கொக்குவில் இந்துவின் மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1.30மணிக்கு கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வுக்கு இளைப்பாறிய அதிபர் செ.குணபாலசிங்கம் பிரதம வருந்தினராகக் கலந்து கொள்வார்.பரிசில்களை திருமதி நித்திய லட்சுமி குணபாலசிங்கம் வழங்குவார். (ந)

# இலவசக் கணனிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழப்பாணம் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடாத்தப்படும் 2003ம் ஆண்டிற்கான இலவசக் கணனிப் பயிற்சி வகுப்புக்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இப் பயிற்சித் திட்டத்தின் கீழ் எம்.எஸ்.வேட், எம்.எஸ்.எக்சல்ஆகிய வழமையான இரு பாடநெறிகளுடன் கணனித் தட்டெழுத்துப் பயிற்சியும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

உயர் கல்வி அமைச்சின் முறைசாராக் கல்விப் பயிற்சித் திட்டத்தின் கீழ் நடைபெறும் இப் பயிற்சித் திட்டத்திற்கு தனித்தனி 50 மாணவர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்

பாடசாலையை விட்டு வெளியேறிய சகல வயதுப் பிரிவு ஆண். பெண் இருபாலாரும் இதற்கான விண்ணப்பப்படிவத்தினை இன்று தொடக்கம் கல்லூரி அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்கலாம் மார்ச் 3ம் திகதி காலை 10மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு. கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சகலரும் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும் என அதிபர் க.இராஜதுரை அறிவித்துள்ளார். (ந)

# கணனி கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழிலநுட்ப நிறுவனத்திற்கு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜினால் மூன்று கணனிகள் வழங்கப்பட்டுள்ளன.

கணனி கையளிப்பு தொடர்பான நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-5)

## புலிகள்....

உண்மையிலேயே யுத்த நிறுத்த மீறல் ஆகும்.

விடுதலைப்புலிகள் பல் வேறு சந்தர்ப்பங்களில் யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்டிருந்த போதும அரசு அதனை பெரிதாகப் பொருட்படுத்தாமல் இருப்பது கண்டனத்துக்குரிய செயலாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை குச்சவெளி திரியாய்ப் பகுதியில் இடம் பெற்ற கடற் படையினரின் ஊடுருவல் சம்பவத்தையடுத்து சுமார் 8மணித்தியாலங்களுக்கு மேல் அப் பகுதியில் சண்டைமூளும் அச்சம நிலவி வந்தமையை அடுத்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு சமரசம் செய்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (வ)


## வாழ்த்துகிறோம்

நீர்வேலி செல்வக்கதிர்காம கோவில் பிரமதமகுருவும் சமய, சமூக நிறுவனங்களின் தலைவராகவும், செயலாளராகவும் இருந்து வரும் ''நீர்வைமணி'' **தியாகராஜக் குருக்கள்** அகவை அறுபதைக் காணும் நன்நாளில் பல்வகைச் சிறப்புக்களும் பெற்று பல்லாண்டுகாலம் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறோம்.

**வாழ்த்துவோர்**

க.கணேசராசா
(குட்டியப்புலம் ஆசிரியர்)
ஞானம்
(ஆர்.விஜி. பீடி நிறுவனம்
செட்டித்தெரு. நல்லூர்)

வலி.கிழக்கு பிரதேச சபை
நீர்வேலி ஊழியர்கள்
ச.லோகநாதன்
து. கிருபாகரன்
(துர்க்கா பேக்கரி)
க. சர்வலோகராசா (கே.எஸ்.ஆர்)

(C/5803)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.02.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.